Koviloor Acadamy

54

காதற்கீதம்

ரஷ்யக்கதை

5352

PRESENTED BY:
V. ...
KADY...

KVC0492

ஜோதி நிலயம்

Koviloor Acadamy

சர்வதேசக் கதைகள்

ஒவ்வொன்றும் விலை அணு எட்டு

காதற்கதை
(இத்தாலியக் கதை)

வெற்றி
(பிரஞ்சுக் கதை)

காளி
(ஜெர்மன் கதை)

காதற் கீதம்
(ரஷ்யக் கதை)

பெண் மனம்
(ஸ்பானியக் கதை)

போலி
(ஆங்கிலக் கதை)

தேவமலர்
(ஸ்விடிஷ் கதை)

3 - கதைகள்
(ஹங்கேரியக் கதை)

துர்லக்
(செக்கோஸ்லாவேகியக் கதை)

இசைச் செல்வன்
(போலிஷ் கதை)

உயிர் ஆசை
(அமெரிக்கக் கதை)

வழிப்பறவைகள்
(டேனிஷ் கதை)

மணியோசை
(ஜப்பானியக் கதை)

★ அடுத்து வருபவை

செவிலித்தாய்
(இத்தாலியக் கதை)

கிரிஷ்கா
(டட்ச் கதை)

மந்திர ஜாடி
(ஆங்கிலக் கதை)

விஷ வித்து
(ஜெர்மன் கதை)

அடிமைப் பெண்
(ஸ்விடிஷ் கதை)

கணிகை
(பிரஞ்சுக் கதை)

இன்னும் பல நாட்டுக் கதைகளும் வெளிவருகின்றன

ஜோதி நிலையம்
திருவல்லிக்கேணி — சென்னை

Koviloor Acadamy

84.

சர்வ தேசக் கதை மலர் - 4

ரஷ்யக் கதை

5332

Y.M.C. ASSOCIATION PAGANERI.
பாகனேரி

திருவள்ளுவர் நூல் நிலையம்

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

விலை அணா எட்டு

Koviloor Acadamy

இதுவரை வெளிவந்துள்ள சர்வதேசக் கதைகள்

ஒவ்வொன்றும் விலை அணா எட்டு

காதற் கதை
இத்தாலியக் கதை

வெற்றி
பிரெஞ்சுக் கதை

காளி
ஜெர்மன் கதை

காதற் கீதம்
ரஷ்யக் கதை

பெண் மனம்
ஸ்பானியக் கதை

போலி
ஆங்கிலக் கதை

தேவமலர்
ஸ்விடிஷ் கதை

3 கதைகள்
ஹங்கேரியக் கதை

துர்லக்
செக்கோஸ்லாவேகியக் கதை

இசைச் செல்வன்
போலிஷ் கதை

உயிர் ஆசை
அமெரிக்கக் கதை

வழிப்பறவைகள்
டேனிஷ் கதை

மணியோசை
ஜப்பானியக் கதை

இன்னும் பல தேசத்துக் கதைகள் பிரதி மாதமும் வெளிவருகின்றன.

Printed at the Rajan Electric Press,—1000 Copies.

Koviloor Acadamy

காதற்கீதம்

ரஷ்யக் கதை

எழுதியவர்

ஐவான் டர்ஜனிவ்

மொழிபெயர்த்தவர்

ரா. ஆறுமுகம்

PRESENTED BY:
V. PL. PL. M.

ஜோதி நிலயம்

திருவல்லிக்கேணி : சென்னை

Koviloor Acadamy

சர்வ தேசக் கதை மலர் - 4

உரிமை பதிவு செய்யப்பெற்றது
விலை அணா எட்டு

அவமானச் சின்னம்
அமெரிக்க நாவல்
ரா. ஆறுமுகம் மொழிபெயர்ப்பு
விரைவில் வெளிவரும்

Koviloor Acadamy

ஆசிரியர்

ரஷ்யா அரசியல் பொருளாதாரத்துறையில் புரட்சிகரமான மாறுதலைச்செய்து அபாரமாக முன்னேறி இருப்பதைப்போல் இலக்கியத்திலும் வெகுதூரம் முன்னேறி விட்டது. ரஷ்ய இலக்கியங்களை மொழிபெயர்க்காத பாஷைகளே உலகத்தில் கிடையாதென்று சொல்லி விடலாம். அத்தகைய பெருமையும் வளமும் உள்ள ரஷ்ய இலக்கியத்தை எருவிட்டுத் தழைக்கவைத்தவர்களில் ஐவான்டர்ஜனிவும் ஒருவர்.

ஐவான்டர்ஜனிவ் 1818-ம் வருஷம் ஓரல் நகரில் ஓர் உயர் குடும்பத்தில் பிறந்தார். 1883-ல் பாரீஸில் தனது 65-ம் வயதில் இறந்தார்.

பள்ளிப்படிப்பு முடிந்ததும் ஒரு வருஷம் அரசாங்க உத்தியோகம் பார்த்தார். அவருக்கு அதில் நாட்டம் கொள்ளவில்லை சுயேச்சையை விரும்பினர். வேலையை உதறித்தள்ளிவிட்டு இலக்கியப் பணியில் இறங்கினர். ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தார். பாரிஸுக்குச்சென்று அங்கு தங்கி இருப்பதில் அவருக்கு மிக்க பிரியம். பிரெஞ்சு பாஷையும் அவருக்கு நன்ருக வரும்.

முதலில் அவர் கவிதை எழுத ஆரம்பித்தார். பிறகு தான் நாவல்கள் எழுதினர். அவருடைய முதல் நாவல் வெளியானதும் அரசாங்கம் அவரை சிறைக்கனுப்பியது. காரணம் அவர் சுதந்திரத்தைப்பற்றி எழுதியதுதான்.

அவருடைய நாவல்கள் எல்லாமே மிகச் சுருக்கமாகத் தான் இருக்கும். சிலவற்றைத் தவிர மற்றவைகள்யெல்

Koviloor Acadamy

லாம் நாற்பது ஐம்பது பக்கங்களுக்குமேல் இருக்காது விஷயங்களை சுருக்கமாகவும் அழகாகவும் சொல்வதில் அவருக்கு இணை அவர்தான் என்று ஐரோப்பிய ஆசிரியர்கள் புகழ்கிருர்கள். அவருடைய கற்பனை அபாரமானது' படிப்பவர் மனத்தில் மறக்கமுடியாத 'உணர்ச்சி அலைகளை எழுப்பக்கூடியவை அவருடைய நூல்கள். அதிவேகமாக முன்னேறும் இந்த நாகரிகம் மனிதன் தன்னைத்தானே அழித்துக்கொள்ளத்தான் என்று அவர் எழுதியது இன்று கண்கூடாகக் கிடக்கிறது. அவர் எழுதியவைகளில் ' உயர் குலத்தவர்களின் கூடு,' 'தந்தையும் மகனும்' 'ஹெலன், 'கன்னி நாடு' 'காதற்கீதம்' 'அருணேதயம்' முதலியவை சிறந்தவையாகும். இன்னும், முதற் காதல், முமு. 'துரதிஷ்டப்பெண்' ' அன்னேச்சா ' முதலியவைகளும் அக்காலத்து நாவல்களில் முதன்மை ஸ்தானம் வகித்தன.

இந்தக் கதை

ரஷ்யக் கதைத் தொகுப்புகளில் இக்கதை இல்லாத தொகுப்பே கிடையாது. உலகத்தில் பல பாஷைகளில் இது வெளியாகி இருக்கிறது. ஆங்கிலத்திலேயே பல மொழிபெயர்ப்புகள் வந்துள்ளன.

டர்ஜனிவின் அபாரமான கற்பனு சக்திக்கு இந்தக் கதையை ஒரு உதாரணமாகக் கூறலாம். உயிருக்குயிராக இருந்த இரு நண்பர்களிடையே ஒரு அழகியை கொண்டு வந்து அதன் மூலம் ஒரு பயங்கர நாடகத்தை நடத்தி விடுகிருர். கிழக்கு நாடுகளில் சுற்றிவிட்டு வந்த மூஸியோ என்னென்ன கற்றுக்கொண்டு வந்திருக்கிருன். வாய் பேசாத ஊமை எப்படிப்பட்ட பயங்கரங்களை நிகழ்த்து கிருன். உயர்ந்த கதை என்று உலக பாஷைகளால் போற்றப்படும் இதை தமிழர்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

26–4–44. ரா. ஆறுமுகம்

திருவல்லிக்கேணி.

Koviloor Acadamy

பதினாறும் நூற்றாண்டின் மத்திய காலத்தில் இத்தாலி தேசத்தில் பெருரா என்ற நகரில் பேபோ ரூஸியோ என்ற இரு வாலிபர்களிருந்தனர். அக்காலத்தில் அந்நகரம் சித்திரத்திலும் கவிதையிலும், ரஸிகத் தன்மையுடைய அரசர்களின் ஆட்சியில் புகழ்பெற்று விளங்கியது. அவ்வாலிபர்களிருவரும் ஏறக்குறைய சம வயதை யுடையவர்கள்; நெருங்கிய உறவினர்கள்; எப்போதும் இணைபிரியாதிருப்பவர்கள். குழந்தைப் பருவமுதல் அவர்களிடையே வளர்ந்த உண்மையான, மாசு மறுவற்ற சிநேகம் அவர்களிருவரையும் ஒன்றாய்ச் சேர்த்துவிட்டது. மேலும் அவர்களுடைய ஒரேமாதிரி விதியே அவர்களின் பாசத்தை இறுகப் பிணைத்துவிட்டது. இருவரும் பரம்பரையாய் வந்த மேலான வம்சத்தில் உதித்தவர்கள்; செல்வமும், சுயேச்சையும் பெற்றவர்கள். இருவருக்கும் குடும்பத் தொல்லையே இல்லை; அவர்களுடைய இலக்கிய ரஸிகத்தன்மைகூட ஒரேமாதிரிதானிருந்தது. ரூஸியோ சங்கீதத்தில் நிபுணன்; பேபோ வர்ணச் சித்திரம் தீட்டுவதில் தேர்ந்தவன். அந்நகரத்தின் ராஜ சபைக்கும், ஜன சமூகத்திற்கும் அவர்கள் கிடைத்தற்கரிய பொக்கிஷங்களாய்த் திகழ்ந்தபடியால் அங்குள்ள மக்கள் இவ்விளைஞர்களைக் குறித்துப் பெருமைப்பட்டார்கள்.

Koviloor Acadamy

கல்வியிலும், சம்பத்திலும், வயதிலும், பிறப்பிலும்—எல்லா விஷயங்களிலுமே - ஒற்றுமையாய்க் காணப்பட்ட அவர்கள் உருவத்தில்-வெளித் தோற்றத்தில் மாத்திரம், வேறுபட்டிருந்தார்கள். ஆனால் இருவரும் வயதிற்கேற்ற கம்பீரமும், அழகும் வாய்ந்திருந்தார்கள். பேபோ வாட்டசாட்டமாய் வளர்ந்தவன்; வெள்ளை நிறம்; செக்கச் சிவந்த பொன்னிறமான தலைமயிர்; நீலக் கண்கள். அதற்கு நேர்மாருக இருந்தான் ரூஸியோ. பழுப்புநிறமான முகமும், கருகருத்த மயிரும், அதைப்போலவே கண்களுமிருந்தன. இந்தக் கருவிழிகளில் பேபோவின் கண்களில் காணப்படும் ஆநந்தமான ஒளி இல்லை. அவன் உதட்டில் தாண்டவமாடும் குறு நகையுமில்லை. ரூஸியோவின் புருவங்களில் வளர்ந்திருந்த அடர்த்தியான கட்டை மயிர் அவனுடைய சிறிய கண்ணிமைகளை மறைத்திருந்தது. பேபோவிற்கோ, அவனுடைய விசாலமான பட்டுப் போன்ற நெற்றியின் இரு பக்கங்களிலும் பொன் வில்லைப் போன்று புருவம் வளைந்துநின்றது. ரூஸியோவின் பேச்சில் அவ்வளவு உணர்ச்சியிருப்பதில்லை. எனினும் நண்பர்களிருவரும் ஸ்திரீகளிடையே சம அந்தஸ்தையும், மரியாதையையும் பெற்ருர்கள். காரணம், அவர்கள் வாஸ்தவத்திலேயே பிரபுக்களுக்குள்ள பெருந்தன்மையும், தாராள மனப்பான்மையும், கொண்டிருந்தார்கள்.

அக்காலத்தில் அந்நகரில் வெலிரியா என்ற யுவதி ஒருவள் இருந்தாள். அந்த நகரத்திலிருந்த பெண்களிலேயே அதிக அழகுவாய்ந்தவர்களில் அவளும் ஒருவள். அவள் அதிகமாக வெளியே வருவதில்லை

Koviloor Acadamy

வீட்டிற்குள்ளேயே இருந்தபடியால் மற்றவர்கள் சாதாரணமாக அவளைக் காணவே முடிவதில்லை. வாரம் ஒரு முறை சர்ச்சுக்கு போவாள். அல்லது பெரிய திரு விழாக் காலங்களில், வெளியே செல்வாள். மற்ற போது வெளியே வருவதே இல்லை. அவள் தன் விதவைத் தாயுடன் வசித்துவந்தாள். தாயார் பெரிய குடும்பத்தில் பிறந்தவள். ஆனால் பணக்காரியு மல்ல. அவளுக்கு வேறு குழந்தைகளும் கிடையாது. வெலீரியாவைச் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் தங்களை யறியாமலே ஒருவித ஆச்சரிய நெகிழ்ச்சியும் அவளி டத்தில் ஒரு தனி மதிப்பும் ஏற்பட்டுவிடும். அவ ளுடைய வசீகர வதனமும், அடக்கமான நடத்தையும், யௌவனத்தில் மலர்ந்து பூர்ணப் பொலிவுற்று விளங் கும் ஒவ்வொரு சின்னங்களும் அவ்வளவு கவர்ச்சி யுள்ளனவாக யிருந்தன.

அவளுடைய வெண்மையான மேனியைக்கண்டு சிலர் அவள் சக்தியிழந்து, இரத்தப்பசை யில்லாமை தான் அப்படி வெளுத்திருக்கிறாளோ என்றுகூடக் கரு தினார்கள். அவளுடைய கண்கள் எப்போதுமே தரை யையேதான் பார்த்துக்கொண்டிருக்கும்; அதில் ஒரு வித நாணமும் பயமும் கலந்திருந்தது. அவள் உதடு களில் எப்பொழுதாவது ஒருசமயத்தில்தான் புன்னகை அரும்பும். அதுவும் வெகு இலேசாகத்தான். அவள் குரல் எப்படி இருக்குமென யாருமே, பேசிக் கேட்ட தில்லை ஆனால் அவள் அதிகாலையில், நகரம் முழுதும் அமைதியான நித்திரையில் ஆழ்ந்து கிடக்கையில், தன் அறைக்குள்ளிருந்தபடியே வீணையை மீட்டி பழங் காலப் பாட்டுக்களைப் பாடுவது வெகு இனிமையா

Koviloor Acadamy

யிருக்குமென்று பலர் பேசிக்கொண்டார்கள். அவளுடைய முகம் இரத்தப் பசையற்றுபோலக் காணப்பட்டாலும், வெலீரியா நல்ல திடகாத்திரமாகவே இருந்தாள். வயது முதிர்ந்தவர்கூட அவளைக் காணும்போது “ஆஹா! இதழ்கள் குவிழ்ந்து மலராமல் இருக்கும் இந்தப் புஷ்பம் - இன்னும் ஸ்பரிசம் படாத இந்தமலர், தானாகவே ஒருவனுக்காக மலரும் போது அந்த இன்பத்தை அனுபவிக்கப்போகும் காளை எவ்வளவு களிப்படைவானோ!” என்று ஒரு கணம் சிந்திக்காமல் இருக்க முடியாது.

2

பிரெஞ்சு தேசத்தின் அரசன் பன்னிரண்டாம் லூயியின் மகள் தான் பெரூரா நகரின் ராணி. அவள் பாரிஸ் நகரிலிருந்த ஒரு பெரிய கனவானை தன் நகருக்கு அழைத்திருந்தாள். அதற்காக வெகு ஆடம்பரமானமான வரவேற்பு ஒன்றை பெரூராவின் மன்னன் ஏற்பாடு செய்தான். நகரில் அரண்மனையின் முன் உள்ள பெரிய மைதானத்தில் அந்த வைபவம் நிகழ்ந்தது. அதற்கு நகரத்திலுள்ள பிரபலஸ்தர்கள் எல்லோரும் விஜயம் செய்திருந்தார்கள். அப்போதுதான் நண்பர்கள் பேபோவும், ஏூஸியோவும் முதன்முதலாக வெலீரியாவைப் பார்த்தார்கள். நகரத்துச் சீமாட்டிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட உயர்வான ஓர் இடத்தில் தன் தாயாருடன் அவள் அமர்ந்திருந்தாள். அவளைக் கண்டதுமே நண்பர்களிருவரும் அவன்மீது கரைகடந்த காதல்கொண்டு விட்டனர். அவர்கள் தங்களுக்குள் எந்த விஷயத்தையும் மூடி

Koviloor Acadamy

வைக்கும் வழக்கமில்லாதவர்களாகையால், ஒருவன் மனதில் நடக்கும் போராட்டத்தை மற்றவன் அறிய முடிந்தது. அதன்மேல் அவர்கள் ஒரு முடிவு செய்தார்கள். அதாவது, இருவரும் வெலீரியாவோடு நெருங்கிப் பழக முயற்சிசெய்வது; அதில் அவள் தங்கள் இருவரில் யாரை விரும்புகிருளோ, அதற்கு மற்றவன் இசைந்து, மறு வார்த்தை பேசாமல், மனதில் எவ்வித வருத்தமுமில்லாமல், விலகிக்கொள்ள வேண்டியது. இதுதான் தீர்மானம்.

எவ்வளவோ கடினப் பிரயத்தனங்களெல்லாம் செய்து, கடைசியாக எவரும் சுலபமாகச் செல்ல முடியாத அந்த விதவையின் இல்லத்தை யடைந்தார்கள். அவளும் அவர்கள் அடிக்கடி வந்து செல்ல அநுமதி கொடுத்துவிட்டாள். அன்றுமுதல் அவர்கள் பிரதி தினமும் வெலீரியாவைக் கண்டு பேசிப் பழகலானுர்கள். அதன் விளைவாக அவ்விளைஞர்களின் உள்ளத்தில் காதல் கனல் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. ஆனுல் வெலீரியாவுக்கு அவர்கள் தினமும் வந்து பேசிவிட்டுப்போவது ஆனந்தத்தைக் கொடுத்தபோதிலும் அவள் அவர்களில் யாரிடமும் தன் அந்தரங்கமான அன்பையோ, நட்பையோ காட்டிக்கொள்ளவில்லை.

மூஸியோவின் சங்கீதத்தில் கலந்து கொண்டு அவள் அதை நன்கு ரஸித்தாள். பேபோவிடம் அதிகமாகப் பேசியே இன்புற்ருள். அவனிடம் மாத்திரம் அவள் அவ்வளவாக வெட்கப்படாமல் நடந்துகொண்டாள். முடிவாக அவர்கள் தங்கள் அதிர்ஷ்டத்தை சோதிக்க எண்ணி வெலீரியாவுக்கு ஒரு கடிதம் எழுதினுர்கள். அதில் அவர்கள், அவள் யார்மீது காதல்

Koviloor Acadamy

கொண்டிருக்கிருள் என்பதை உடனே தெரிவிக்க வேண்டுமென ஒளிவு மறைவில்லாமல் கேட்டிருந்தார் கள். வெலிரியா அக்கடிதத்தை தன் தாயாரிடம் காண் பித்து, தான் விவாகமில்லாமல் கன்னிப் பெண்ணுகவே காலம் கழிக்க விரும்புவதாகக் கூறினுள். ஆனுல் தாய் அவளை "நீ கல்யாணம் செய்துகொள்ளத்தான் வேண் டும்" என்று வற்புறுத்தினுள்; அதன்பேரில் தன் தாய், யாரை மணக்கச் சொல்லிக் கட்டளையிடுகி ருளோ அவனையே கல்யாணம் செய்துகொள்வதாக வெலிரியா சொன்னுள்.

அதைக்கேட்ட அவள் தாய், தான் அருமையாக வளர்த்த பெண்ணை விட்டுப்பிரியும் நாள் வந்துவிட் டதேயென்று நினைத்துக் கண்ணிர் வடித்தாள். தன் மகளை விரும்பும் அந்த இரு வாலிபர்களையும் அவளுக் குப் பிடித்திருந்தது. இருவரும் அவளுக்குத்தகுதியான வர்கள்தான். ஆகையால் அவர்களை வேண்டாமென்று சொல்லக் காரணமில்லை. ஆனுல் அவள் தன் மனதிற் குள்ளேயே பேபோவைத் தான் சிறந்தவனென்று விரும்பினுள். அவனைத் தான் தன் பெண்ணும் காத லிப்பதாகச் சந்தேகமும் கொண்டிருந்தபடியால், அவ னுக்கே தன் மகளைக் கொடுப்பதென்று தீர்மானித் தாள். மறுநாள் இந்தச் சந்தோஷச் செய்தியைக் கேள்விப்பட்டான் பேபோ. அவர்கள் ஏற்கனவே முடிவுகட்டியபடி மூஸியோ இப்போது தன் வார்த் தையைக் காப்பாற்ற பேசாமல் விலகிக்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

மூஸியோவும் இதற்கு இணங்கிவிட்டான். ஆனுல் தன் தோழன்—இப்போது தனக்கு எதிரியாகப்

Koviloor Academy

பாவிக்கப்படும் அவன்—வெற்றியடைந்ததைக் காண அவன் மனம் சகிக்கவில்லை. ஆகையால் அவன் உடனே தன் ஆஸ்தியில் பெரும் பகுதியை விற்றுப் பணம் சேர்த்து எடுத்துக்கொண்டு கிழக்கத்திய தேசங்களில் நீண்ட பிரயாணம் செய்யப் புறப்பட்டு விட்டான். புறப்படும்முன் பேபோவிடம் விடைபெற்றுக் கொள்ளுகையில் தனக்கு வெலீராயாமீதுள்ள காதல் முற்றிலும் மறக்காதவரையில்—அந்த எண்ணம் ஒரு துளி மனதில் இருந்தால்கூட, தான் திரும்பியே வரப் போவதில்லையென்று தெரிவித்தான். அதைக்கேட்ட பேபோ சிறுபிராயம் முதல் தன்னோடு பழகிய பால்ய நண்பன் பிரிந்து போவதைக் குறித்து மிக்க மனவேதனைப் பட்டான். ஆனால் தனக்காக காத்திருக்கும் இன்ப வாழ்வை நினைத்து—வெலீரியாவின் காதல் மோகத்தில் ஆழ்ந்து—தான் அநுபவிக்க இருக்கும் இனிய நாட்களை எண்ணி, அந்த மனோ வேதனையைச் சகித்துக்கொண்டான்.

பேபோ சீக்கிரமே வெலீரியாவைக் கலியாணம் செய்துகொண்டான். அப்போதுதான் அவன் தனக்குக் கிடைத்த பூர்ண இன்பத்தையும் அநுபவித்து அறிந்தான். பெருரா நகரிலிருந்து சற்று தூரத்தில் அவனுக்கு ஓர் அழகான பங்களா இருந்தது. தன் மனைவியையும், அவள் தாயாரையும் அங்கே அழைத்துக் கொண்டு போய்விட்டான். அவர்களுக்கெல்லாம் ஒரு நல்லகாலம் பிறந்துவிட்டது. பேபோவின் தாம்பத்ய வாழ்க்கையில் ஒரு புது ஒளி தோன்றியது. காதலர்களிருவரும் அதில் மூழ்கி ஆனந்தித்தனர். பேபோ இப்போது சாதாரண சைத்ரிகனாக இல்லை; பெரிய நிபு

ணுக மாறிவிட்டான். தன் மகளும் மருமகனும், மலரும் மணமும் போல ஒத்து வாழ்வதைக் கண்டு மனம் பூரித்து வெலிரியாவின் தாய் கடவுளை வாழ்த்தி ஞள்.

நான்கு ஆண்டுகள் கனவுபோல ஓடி மறைந்தன. இன்பக் கடலில் நீந்திக்கொண்டு கரை தெரியாது தத்தளித்த அந்த இளந் தம்பதிகளுக்கும் ஒரு குறை இருந்தது. அக்குறை அவர்களை மிகவும் வாட்டியது. அவர்களுக்கு புத்திர பாக்யம் இல்லை! எனினும் அவர்கள் நம்பிக்கையை இழக்கவில்லை. நான்காம் ஆண்டின் இறுதியில் அவர்களுக்கு ஓர் ஆற்ருெணுத் துக்கம் ஏற்பட்டது. வெலிரியாவின் தாய் சில நாட்கள் நோய்வாய்ப்பட்டுக் கிடந்து இறந்து போனுள். வெலிரியா அதற்காக வடித்த கண்ணீர் கொஞ்சமல்ல. வெகு நாட்கள்வரை அந்தத் துக்கம் அவளை வாட்டி வதைத்துவிட்டது. இவ்வாறு ஒரு வருஷம் கடந்தது. மறுபடியும் அவர்கள் வாழ்க்கைப் பெருக்கு முன்போலவே நிம்மதியாகவும் சந்தோஷ மாகவும் செல்ல ஆரம்பித்தது. திடீரென்று ஒரு நாள் மாலை, எதிர்பாராத விதமாக, சுற்றுப் பிரயா ணத்தை முடித்துக்கொண்டு சூலியோ பெருராவிற் குத் திரும்பி வந்துசேர்ந்தான்.

3

சூலியோ அக்ஞாதவாசம் செய்த அந்த ஐந்து வருஷங்களில் யாருக்கும் அவனைப்பற்றி ஒரு தகவலும் தெரியாது. அவன் இந்த உலகத்தை விட்டே மறைந்து

Koviloor Acadamy

போய்விட்டானே என்று எண்ணும்படி, அவனைப் பற்றி உலாவி வந்த வதந்திகள்கூட நாளடைவில் நின்றுவிட்டன். பேபோ அவனை ஒருநாள் நகரத்தில் சந்தித்தான். அப்பட்டணத்தில் முதன் முதலாக அவனைக் கண்டதும் ஒருவித பயம் உண்டாயிற்று. அடுத்த கணம் தாங்க முடியாத ஆனந்தம் மேலிட்டது. சத்தம் போட்டுக் கூவிக்கொண்டே ஓடி அவனைக் கட்டித் தழுவிக்கொண்டான். அப்போதே தன் பங்களாவிற்கு வரும்படி அழைத்தான். அங்கே தோட்டத்தில், பங்களாவைவிட்டுத் தனியாக, ஒரு விசாலமான அறை இருந்தது. அதில் தன் நண்பன் தங்கியிருக்கலாமென்று பேபோ சொன்னான். ரூஸியோவும் சந்தோஷத்தோடு அதற்குச் சம்மதித்தான்.

அன்றைக்கே அவன் தன்னோடு கூட்டிக்கொண்டு வந்திருந்த ஒரு மலேயா தேசத்து வேலைக்காரனோடு அங்கே சென்று தங்கினான். அந்த வேலைக்காரன் ஒரு ஊமை, ஆனால் செவிடனல்ல. அவனுடைய கூரிய பார்வையைக் கொண்டே அவன் நுண்ணறிவு படைத்தவனென்று யாரும் சொல்லிவிடலாம். அவனுடைய நாக்குத்தான் பேச முடியாதபடி. துண்டிக்கப்பட்டுப் போய்விட்டது, ரூஸியோ வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது, சுற்றியலைந்து சேகரித்த விதவிதமான விலையுயர்ந்த சாமான்களடங்கிய ஏராளமான பெட்டிகளையெல்லாம் அங்கே கொண்டு வந்து நிரப்பி விட்டான்.

வெலீரியாவுக்கும் அவன் திரும்பி வந்ததில் பரம திருப்தி. அவனும் அவளுக்குச் சிநேக முறையில் கண்யமாக மரியாதை செலுத்தினான். அவன் நடந்து

Koviloor Acadamy

கொண்ட ஒவ்வொரு தினுசிலும், பேபோவுக்கு அவன் வாக்களித்தை மறக்காமல் இருக்கிறன் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அவன் வந்து தங்க ஆரம்பித்த அன்றையதினம் முழுதும் அவனுடைய சாமான்களை ஒழுங்குபடுத்தவே அவனுக்குப் பொழுது சரியாக இருந்தது: கம்பளங்கள், பட்டுத் துணிகள், வெல்வெட்டினுலும் ஜரிகையினுலும் தைக்கப்பட்ட அங்கிகள், ஆயுதங்கள், கோப்பைகள், தட்டுகள், எனமல் வேலைப்பாட்டுடன்கூடிய பாத்திரங்கள், முத்துக்களும் வைரங்களும் பதித்த பொன் வெள்ளிச் சாமான்கள், தந்தத்தாலும் அம்பராலும் நகாஸ் வேலை செய்யப்பட்ட பெட்டிகள், வாசனைத் திரவியங்கள், காட்டுமிருகங்களின் தோல்களினுல் செய்யப்பட்ட கச்சைகள், பெயர் தெரியாத பறவைகளின் அழகிய இறகுகள், இம்மாதிரியாக இன்னும் அநேக பொருள்கள், உபயோகத்திற்கே மிக்க விசித்திரமானவைகள், எப்படி உபயோகிப்பது என்பதே புரியாதவைகள்— இவ்வளவையும் அந்த ஊமை வேலைக்காரன் உதவியைக் கொண்டு ஒவ்வொன்ருய்ப் பிரித்து வைத்துக்கொண்டிருந்தான் மூஸியோ. அவ்வளவு கிடைத்தற்கரிய பொருள்களுடன் விலை மதிக்க முடியாத ஒரு முத்து மாலையையும் அவன் கொண்டுவந்திருந்தான். அது பாரசிக தேசத்து மன்னனுல், மூஸியோவுக்கு சன்மானமாக, அவன் செய்த ஒரு பெரிய, அற்புதமான சேவைக்கு வழங்கப்பட்டது. அந்த மாலையைத் தன் கையாலேயே வெலிரியாவின் கழுத்திலணிவிக்கவேண்டுமென அவளிடம் அநுமதி வேண்டினுன். முதலில் அவளுக்குச் சம்மதமளிக்கக் கஷ்டமாயிருந்தது ; தயங்

கினுள். பின்பு சம்மதித்துவிட்டாள். அவன் அதை அணிந்தபோது அவளுக்கு உடல் புல்லரித்தது. அந்த ஆபரணம் அவளுடைய அழகை இன்னும் மிகைப் படுத்தியது.

அன்றிரவு போஜனத்திற்குப் பிறகு எல்லோரும் பங்களாவின் மாடிக்குச் சென்று அமர்ந்தார்கள். மூஸியோ தன் சுற்றுப்பிரயாணத்தில் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சிகளை அவர்களுக்குச் சொல்ல ஆரம்பித்தான். தூரதேசத்தில் அவன் பார்த்த நாடுகள், மேக மண்டலத்திற்குமேல் வளர்ந்திருக்கும் பெரிய மலைத் தொடர்கள், சமுத்திரத்தைப்போன்ற நதிகள், பிரம் மாண்டமான கட்டிடங்கள், ஆலயங்கள், ஆயிரக் கணக்கான வயதையுடைய மரங்கள், வானவில்லின் வர்ணங்களைக்கொண்ட புஷ்பங்கள், பறவைகள், வித விதமான நகரங்கள், அதில் வசிக்கும் மாந்தர்கள், அவர்களுடைய விசித்திரமான பெயர்கள், இவைகளை யெல்லாம் ஒன்றுவிடாமல் விளக்கிக் கூறினுன். கிழக் கத்திய நாடுகளைப்பற்றி அவனுக்கு நல்ல பரிசய மிருந்தது. குணத்திலும் அழகிலும் சிறந்த குதிரைகள் வசிக்கும் பாரசீகம், அரேபியா முதலிய நாடுகளை யெல்லாம் அவன் பார்த்திருந்தான். இந்தியாவின் மூலை முடுக்குகளெல்லாம் அவன் சுற்றியிருக்கிறுன். சீனுவிலும், திபேத்திலுமுள்ளவர்கள் தங்கள் கண் முன் உயிருள்ள தெய்வமென்று கொண்டாடும் பேச்சற்ற, குறுகிய கண்களையுடைய தலேலாமா என்ற மஹானைத் தரிசித்திருக்கிறுன். இப்படியாக அவன் சொன்ன அற்புதக் கதைகள் அநேகம். பேபோவும் வெலிரியாவும் மந்திரத்தால் கட்டுண்டவர்களைப்போல

Koviloor Acadamy

அவன் சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள்.

மூஸியோவின் தோற்றம்கூட சிறிது மாறுபட்டுப் போயிருந்தது. இளமைப் பருவத்திலேயே சற்று பழுப்பேறியிருந்த அவன் முகம், கிழக்கத்திய நாடுகளில் எரிக்கும் சூரிய கிரணங்களில் திரிந்ததால் கருத்துப் போயிருந்தது. அவனுடைய கண்கள் சற்றுக் குழிந்து விட்டன. முகத்தோற்றமே மாறுபட்டு விட்டது. இரவில் வனாந்திரங்களில் சுற்றியலைந்தபோது, காது செவிடுபடும்படி உறுமிய புலிகளின் கோரச் சப்தத்தையும், வனதேவதைகளுக்கு மனித ரத்தத்தைப் பலியிடவேண்டி, பயங்கரமான வழிகளில் பதுங்கியிருந்த கோவில் பூசாரிகளிடமிருந்து தப்பி வந்ததையும் பற்றி மயிர்க்கூச்செரியும்படி அவன் சொல்லிக் கொண்டு வரும்போதுகூட அந்த முகத்தில் எவ்வித பாவமும் தென்படவில்லை. அவனுடைய குரல் மாத்திரம் கணீரென்று தெளிவாய் இருந்தது. இத்தாலியருக்குள்ள இயற்கையான பழக்க வழக்கங்களைக்கூட மூஸியோ மறந்துவிட்டான்.

சமயமறிந்து எக்காரியத்தையும் துரிதமாகச் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றிருந்த அந்த ஊமை வேலைக்காரனின் உதவியைக்கொண்டு, மூஸியோ இந்தியாவில் பிராமணர்களிடமிருந்து கற்ற பல மந்திர தந்திரங்களையெல்லாம் தன் நண்பர்களுக்கு முன் செய்து காட்டினான். ஒரு துணித்திரையைக் கட்டி அதன்பின் மறைந்து, மறு நிமிஷத்திலேயே ஒரு சிறு மூங்கில் குச்சியில் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்பவன் போலச் செய்து காட்டினான். அவன் அந்தரத்தில்

Koviloor Acadamy

நிற்பது போலவேயிருந்ததைக் கண்ட வெலீரியா " உண்மையிலேயே மந்திரவாதி தானே?" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள். போபோவிற்கும் வெலீரியாவிற்கும் இது அதிக ஆச்சரியத்தை யளித்தது. அதற்குப் பிறகு மூஸியோ மகுடியை எடுத்து ஊதி, இரண்டு மூன்று பெட்டிகளின் மூடிகளைத் திறந்தான் 'புஸ்' என்று சீறிக்கொண்டு நல்ல பாம்புகள் நாலா பக்கமும் படமெடுத்து மகுடியின் குரலுக்கேற்ப குதித்து ஆடின. வெலீரியா அதைக்கண்டு நடு நடுங்கி அவைகளையெல்லாம் உடனே பெட்டிக்குள் போட்டு மூடும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

மூஸியோ தன் கதையை முடித்ததும் தம்பதிகளிருவருக்கும் தான் கொண்டுவந்திருந்த ஒயினை ஒரு பெரிய பெட்டியிலிருந்து ஊற்றிக் கொடுத்தான். அது பச்சையும் மஞ்சளும் கலந்த பொன்னிறமாகவும், மிக்க வாசனையாயுமிருந்தது. சிறு கோப்பையில் மெதுவாக ஊற்றியபோது விளக்கு வெளிச்சத்தில் தகதகவென்று மின்னியது. அதன் ருசி ஐரோப்பிய நாட்டின் ஒயினைப் போல இல்லை. தித்திப்பாயும் நறுமணமாயுமிருந்தது. சிறிது சிறிதாக உறிஞ்சிப் பருகும்போதே உடம்பின் ஒவ்வொரு அவயவங்களிலும் படிபடிப்படியாக ஒரு சோர்வை உண்டுபண்ணி தளர்ச்சியடையச் செய்தது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கோப்பை கொடுத்துவிட்டு தானும் ஒருகோப்பை சாப்பிட்டான். வெலீரியா காலி செய்துவைத்த கிண்ணத்தினருகில் குனிந்து, ஏதோ மெதுவாக உச்சரித்துவிட்டு, தன் விரல்களை அதற்குள் விட்டு ஆட்டினான். அவளும் அதைக் கவனித்தாள். ஆனால் பொதுவாக அவன்

Koviloor Acadamy

செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும், பழக்க வழக்கங்களிலும், ஒரு வியப்பு இருந்தபடியால், 'ஒருவேளை அவன் சுற்றிவந்த நாடுகளில் அம்மாதிரி செய்ய வேண்டுமென்ற நம்பிக்கையோ, பழக்கமோ இருக்கலாம்' என்று எண்ணிக்கொண்டாள்.

பின்பு, சற்றுநேரம் கழித்து "நீங்கள், உங்கள் சுற்றுப் பிரயாணத்தில்கூட சங்கீதத்தை மறக்காமலிருந்தீர்களா?" என்று கேட்டாள். அதற்குப் பதிலாக அவன் அந்த ஊமை வேலைக்காரனிடம் தன்னுடைய இந்தியதேசத்து பிடிலை எடுத்துவரும்படி சொன்னான். அது தற்காலத்திய சாதாரண பிடிலைப் போலத் தான் காணப்பட்டது. நான்கு தந்திகளுக்குப் பதில் மூன்றுதானிருந்தன. நீல நிறத்தில் பாம்பின் தோல் ஒன்று அதன் மேல்புறம் ஒட்டப்பட்டிருந்தது. மிக மெல்லிய அரைவட்டமான பிடிலின் வில் நுனியில் பளபளப்பான வைரக்கல் பதித்திருந்தது.

முதன்முதலாக மூஸியோ அதை மீட்டி, பிரபலமான பாடல்கள் என்று தான் கற்று வந்திருந்ததை அழகாகப் பாடினான். பிடிலின் நாதம், இத்தாலியர்களாகிய அவர்களுக்கு கர்ண கடூரமாக இருந்தது. தந்தியின் ஒலி மிகக் குறைவாகவே எழுந்தது. ஆனால் அவன் கடைசியாக ஒரு பாட்டுப் பாடி தந்தியை மீட்டியபோது திடீரென அதன் சத்தம் அதிகமாகி விட்டது. அந்த வில்லின் வலிமையால்தான் அது ஏற்பட்டதோ என்று தோன்றியது. அல்லது பிடிலின் மேல் பாகத்தில் ஒட்டப்பட்டிருந்த பாம்பின் தோலின் சக்தியால், அப்பாம்பு செய்யும் சத்தம்போலவே தான் வெளிப்படுகிறதோ என்று சந்தேகம் ஏற்பட்டது.

Koviloor Acadamy

அவன் தன் திறமையையெல்லாம் கொட்டிப் பொழிந்த இன்பகீதத்தில் பேபோவும், வெலீரியாவும் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்து கண்ணீர் பெருக்கினார்கள். மூஸியோவும் தன் தலையை பிடில்மீது வைத்து அழுத்தியவண்ணம் அப்படியே குனிந்து விட்டான். வில்லின் நுனியில் பதித்திருந்த வைரத்திலிருந்து கண்ணைப் பறிக்கும் சுடர் தெறித்துநின்றது. அந்தப் பாடலின் சக்தியினாலேயே அதற்கும் ஒளி ஏற்பட்டு விட்டதுபோலிருந்தது. தலை நிமிர்ந்து மூஸியோ பிடிலை தோள்மீது சாய்த்துக்கொண்டு ஒரு பக்க கன்னத்தை அதன்மீது வைத்தழுத்தியபடியே தன் வலக்கையிலிருந்த வில்லை நழுவவிட்டான்.

"மூஸியோ; என்ன இது? இதுவரை எங்களுக்கு என்ன பாட்டுப் பாடிக் காண்பித்தாய்?" என்று ஆச்சரியத்தோடும் பதட்டத்தோடும்கேட்டான் போபோ. வெலீரியா ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவள் உடலின் ஒவ்வொரு அங்கங்களும், தன் கணவன் கேட்ட கேள்வியையே திருப்பிக் கேட்பதுபோல உணர்ந்தாள்.

மூஸியோ பிடிலை மேஜைமீது வைத்துவிட்டு, தலைமயிரை ஒதுக்கிவிட்டுக்கொண்டு, புன்னகைபுரிந்த வண்ணம் "அதுவா? அந்தப் பாட்டு.........அதை நான் ஒருசமயம் இலங்கைத் தீவில் கேட்டேன். அப்பாடல் அங்குள்ள மக்களிடையே இன்பகீதமென்றும். காதலின் வெற்றிக் கீதமென்றும், காதற் கீதமென்றும் வழங்கப்படுகிறது" என்று பதில் அளித்தான்.

"அதை மறுபடியும் பாடு, பார்க்கலாம்" என்று போபோ மெதுவாகக் கேட்டான்.

Koviloor Acadamy

"முடியாது. அதைத் திருப்பிப் பாடுவதென்பது சாத்தியமாகாது. மேலும் இப்போது வெகு நேரமாகி விட்டது. வெலீரியா போய் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும். எனக்கும் நேரமாகிவிட்டது......நான் மிக்க களைப்படைந்திருக்கிறேன்" என்று மறுத்து விட்டான்.

பங்களாவிற்கு வந்ததுமுதல் அந்த நிமிஷம்வரை வெலீரியாவிடம் மூஸியோ வெகுநாளைய அன்பு பூண்டிருந்தவனைப்போல கண்யமாகவே நடந்துகொண்டான். ஆனால் அவளிடம் விடைபெற்றுக் கொள்வதற்காக எழுந்து அவள் கையைக் குலுக்குகையில்,தன் விரல்களை அவளுடைய உள்ளங் கையில் தன் பலங்கொண்ட மட்டும் வைத்து அழுத்தினான் ; அவளையே விழுங்கிவிடுவதுபோல அவ்வளவு கடுரமாக அவளை முறைத்துப் பார்த்தான் அந்த வினாடியில். அவள் அவனை நிமிர்ந்து பார்க்காவிட்டாலும்கூட சடாரென்று அவள் கன்னங்களில் ஏறிய சிவப்பு, அவன் பார்வையை அவள் கிரஹித்துக்கொண்டாள் என்பதைக் காட்டியது. அவனிடம் அவள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. தன் கையை மெதுவாக இழுத்துக்கொண்டு அவன் அந்த அறையைவிட்டுச் சென்ற வழியையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவனைப்பற்றி அவள் ஏற்கனவே எவ்வளவோ பயப்பட்டுக் கொண்டிருந்தாள். இப்போதோ அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. மூஸியோ தோட்டத்திலுள்ள தன் அறைக்குச் சென்றுவிட்டான். கணவனும் மனைவியும் தங்கள் படுக்கை யறைக்குள் பிரவேசித்தார்கள்.

Koviloor Acadamy

4

வெலிரியாவுக்குச் சீக்கிரம் தூக்கம் வரவில்லை. அவளுக்கு பீதியினால் ஏற்பட்ட இரத்தக் கொதிப்பு உள்ளுக்குள்ளேயே அலையலையாக எழுந்துகொண்டிருந்தது. தலை பாரமாக கனத்தது. மூஸியோ கொடுத்த ஒயின் அவளுக்கு மயக்கத்தையும் உண்டு பண்ணியது. ஆனால் உண்மையில் அவன் சொன்ன கதைகளும், பாடியபாட்டுமே அவள் மனதைக் கலக்கிக் கொண்டிருந்தன. கடைசியாக, விடியப்போகும் சமயத்தில், நல்ல தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள். அதில் மறக்கமுடியாத ஒரு கனவையும் கண்டாள்.

மிகத் தாழ்வாகவும் வளைவாகவும் கூரை வேய்ந்த விசாலமான ஒரு அறைக்குள் அவள் பிரவேசிக்கிற மாதிரி அவளுக்குத் தோன்றுகிறது. அவளுடைய வாழ்க்கையில் அம்மாதிரி அறையை அவள் கண்டதே இல்லை. சுவர்களிலெல்லாம் தங்கத்தினால் பூவேலைகள் செய்யப்பட்டு சிறு சிறு நீலவர்ண சதுரக்கற்கள் பதிக்கப்பெற்றிருக்கின்றன. மிக மெல்லிய வெண் சலவைக் கல் தூண்கள், பளிங்கினலான மேல் தளத்தைத்தாங்கி நிற்கின்றன. இந்தத் தளமும் தூண்களும் வெளியிலுள்ள வெளிச்சத்தை மங்கலாக உள்ளே கிரகிக்கும் சக்தி வாய்ந்தவைகள். அதன் வழியாக எல்லாப் பக்கங்களிலிருந்தும் வந்த மங்கலான 'ரோஜா' வர்ண ஒளி உள்ளேயுள்ள பொருள்கள்மீதெல்லாம் பரந்து விழுந்து ஒரு அற்புதமான சோபையை சிருஷ்டி செய்தது. தரையெல்லாம் கண்ணாடிபோல வழவழ வென்றிருக்கிறது. அறையின் நடுமத்தியின் ஒரு சிறிய மெத்தை. அதில் போட்டிருக்கும் தலையணைகளின் உறை

Koviloor Acadamy

யின் ஓரங்களில் பொன் ஜரிகை வைத்துத் தைத்திருக்கிறது. அறையின் இருபக்கத்து மூலைகளிலும்கொடிய; பெரிய மிருகங்கள் மாதிரி செய்யப்பட்ட இரு தூபக் கால்கள்; அதிலிருந்து நறுமணங் கமழும் புகை 'கம கம' வென்று வந்துகொண்டிருக்கிறது. ஜன்னல்களே இல்லை. கதவுக்குப் பதிலாக தொங்கும் கருப்புத் திரை காற்றில் அசையாமலிருக்கிறது. திடீரென்று திரை விலகுகிறது. மூஸியோ உள்ளே வருகிறான். அவள் முன் தாழ்மையாகக் குனிந்து, தன் கரங்களை முன் நீட்டி புன்னகை புரிகிறான். அவனுடைய முரட்டுக் கரங்கள் வெலீரியாவின் இடுப்பைச் சுற்றிப் பிடித்து அணைத்துக்கொள்ளுகின்றன. அவனுடைய வறண்ட உதடுகளின் ஸ்பரிசத்தினால் அவள் உடம்பு முழுதும் கனலாய்த் தகிக்கிறது. சோர்ந்து போய் அப்படியே மெத்தைமீது தடாலென விழுந்து விடுகிறாள்.

தூக்கம் கலைந்ததும் பீதியினால் அழுதுகொண்டே மிக்க பிரயாசைப்பட்டு எழுந்து படுக்கையில் அமர்ந்தாள். தான் எங்கேயிருக்கிறோம், தனக்கு என்ன நடந்ததென்பதே அவளுக்குப் புலப்படவில்லை. படுக்கையை விட்டு எழுந்து நின்று தன்னைச் சுற்றிலும் பார்த்தாள். பயத்தினால் உடம்பு வெடவெடவென்று நடுக்கியது: அவள் கணவன் பேபோ அவள் பக்கத்திலேயே படுத்திருந்தான், ஆழ்ந்த நித்திரையில். ஆனால் நிலவொளியில் அவன் முகத்தில் பிரேதக்களை தென்பட்டது. நிஜமாகவே இறந்தவர்களுடைய தோற்றத்தைவிட அதிக கோரமாக இருந்தது. உடனே அவள் அவனை எழுப்பினாள். திடுக்கிட்டு வாரிச்சுருட்டி எழுந்த அவன்

Koviloor Acadamy

'என்ன நடந்தது உனக்கு, என்ன? ஏன் இப்படி நிற்கிருய் ?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

"நான்......நான்......ஒரு பயங்கரமான கனவு கண்டேன்.'' என்று மெதுவாக, நடுங்கிக்கொண்டே சொன்ஞள் வெலீரியா.

அதே சமயத்தில் மூஸியோ தங்கியிருந்த இடத்தி லிருந்து காது செவிடுபடும்படியான சப்தம் காற்றில் மிதந்து வந்தது. காதற்கீதம் என்று அவன் அவர் களுக்கு பாடிக் காட்டிய அதே பாட்டுத்தான் அந்தச் சப்தம். பேபோ அவளைத் திரும்பிப் பார்த்தான். அந்தப் பார்வையில் ஒரு ஆச்சரியம் பிரதிபலித்தது. அவள் தன்னிரு கைகளாலும் கண்களை மூடிக்கொண்டு மறுபக்கம் திரும்பிக்கொண்டாள். அவர்களிருவரும் மூச்சைப் பிடித்துக்கொண்டு அந்தப் பாடலைக்கடைசி வரை கவனமாகக் காதுகொடுத்துக் கேட்டார்கள். பாட்டு முடிந்தது, ஓசை நின்றதும் சந்திரனும் ஒரு மேகத்தின் பின் மறைந்தான், குபீரென அறையில் இருள் சூழ்ந்துவிட்டது. கணவனும் மனைவியும் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் படுக்கையில் வந்து படுத்து விட்டார்கள். யார் முதலில் தூங்கினுர்கள் என்று ஒருவருக்கொருவர் தெரிந்துகொள்ள வில்லை.

5

மறுநாட் காலை சிற்றுண்டிக்கு மூஸியோ வந் தான். அவன் முகம் சந்தோஷமாகக் காணப்பட்டது. வெலீரியாவை அன்போடு நோக்கினுன். அந்தப் பார்வையும், இதயத்தைத் துளைக்கும் கூரிய கண் களும், அவளுக்கு என்னவோ செய்வது போலிருந்தது.

Koviloor Acadamy

அந்தக் கண்டு அவள் சற்று பின்னடைந்தாள். மூஸியோ தன் கதைகளை-வீர தீரச் செயல்களை-மறு படியும் சொல்ல வாயெடுத்தான். ஆனால் பேபோ, முதல் வார்த்தையிலேயே தடுத்து நிறுத்தி விட்டான்.

"நானும் என் மனைவியும், நீ நேற்று இரவு பாடிய அதே பாட்டை இன்று அதிகாலையிலும் பாடக் கேட்டோம். உனக்கு இந்தப் புதிய இடத்தில் தூக்கம் பிடிக்கவில்லை யென்று நினைக்கிறேன்; அப் படித்தானே?" என்று கேட்டான் பேபோ.

"என்ன? நீங்கள்கூடக் கேட்டீர்களா? முதலில் நன்றாய்த் தூங்கிவிட்டேன். ஒரு கனவு கண்டு விழித்த பின்புதான் பாடினேன்."

'கனவு' என்றதும் வெலிரியா கவனமாக காது கொடுத்துக் கேட்டாள்.

"என்ன கனவு அது?" என்று கேட்டான் பேபோ.

வெலிரியாவைப் பார்த்தபடியே அவன் சொல்ல ஆரம்பித்தான்.

"ஒரு பெரிய அறை. மேல் கூரை வளைவாகக் கட்டப்பட்டிருக்கிறது, பழைய கால முறைப்படி. அதற்குள் நான் நுழைகிற மாதிரி இருக்கிறது. அழகான தூண்கள் அந்தக் கூரையைத் தாங்கி நிற் கின்றன. சுவர்களிலெல்லாம் சதுரக்கற்கள் பதிக்கப் பெற்றிருந்தன. சுவர்களில் ஜன்னல்களோ, உள்ளே மெழுகு வர்த்திகளோ இல்லாதிருந்தும்கூட, அச் சுவர்கள் கண்ணாடிக் கற்களால் கட்டப்பட்டவை போன்று,உட்புறமெங்கும்சிவப்பு நிறமாக வெளிச்சம் பரவியிருந்தது. மூலைகளில் சீன தேசத்தில் செய்த

Koviloor Acadamy

தூபக்கால்களிருந்தன. தரையில் விரித்திருந்த மெத்தை மீது அழகான பஞ்சுத் தலையணைகள் கிடந்தன. கதவிற்குப் பதிலாகத் தொங்கிக்கொண்டிருந்த திரைத் துணியை விலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தேன். நான் ஒரு காலத்தில் உள்ளன்போடு காதலித்த ஒரு ஸ்திரீ அறைக்குள் நின்றுகொண்டிருந்தாள். எனக்குப் பழய நினைவுகளெல்லாம் வந்ததும் என் உடம்பே தகிக்கிறதுபோலிருந்தது. அவள் அவ்வளவு சௌந்தர்யமாகக் காட்சியளித்தாள்......" என்று அப்படியே நிறுத்து விட்டான்.

வெலீரியா அசைவற்று கற்சிலைபோல் உட்கார்ந்திருந்தாள். அவள் முகம் லேசாக வெளிறிட்டது. நீண்ட பெருமூச்சு விட்டாள், அதன் அர்த்தத்தை யூகித்தவள்போல.

"அதற்கப்புறம் தான் நான் எழுந்து அந்தப் பாடலைப் பாடினேன்" எனக் கூறி முடித்தான் மூஸியோ.

"அப்படியானால் அந்த ஸ்திரீ யார்?" என்று கேட்டான் பேபோ.

"யாரோ? அவள் ஒரு கிழக்கிந்தியனின் மனைவி. அவளை நான் டில்லியில் சந்தித்தேன். இப்போது அவள் உயிருடன் இல்லை; இறந்து விட்டாள்" என்றான் மூஸியோ.

"அவளுடைய கணவன்......?" இந்த கேள்வியை பேபோ ஏன் கேட்டான் என்று அவனுக்கே விளங்கவில்லை.

"அவனும் இறந்து விட்டதாகத்தான் அங்குள்ளவர்கள் சொல்லுகிறார்கள். ஏனென்றால் நான் சீக்கி

Koviloor Acadamy

ரமே அதை விட்டு வந்து விட்டேன்" என்றுன் மூஸியேர்.

"ஆச்சரியம்தான்! என் மனைவிகூட ஒரு விநோத மான கனவை நேற்று இரவு கண்டாளாம். இன்னும் அதை அவள் என்னிடம் சொல்லவில்லை" என்று சொன்னுன் பேபோ.

வெலிரியா சட்டென்று அங்கிருந்து எழுந்து போய்விட்டாள். சிற்றுண்டியை முடித்துக்கொண்டு மூஸியோவும் கிளம்பிவிட்டான். அவனுக்கு நகரத் திற்குள் ஏதோ அலுவல் இருக்கிறதென்றும், மாலை யில்தான் திரும்பி வரமுடியும் என்றும் தெரிவித்து விட்டுப் போனுன்.

6

மூஸியோ அக்ஞாதவாசத்தினின்று திரும்பி வர அநேக வாரங்களுக்கு முன்பே, பேபோ தன் மனைவி யின் உருவப் படத்தைத் தீட்ட ஆரம்பித்திருந்தான். அது அநேகமாக முடியும் தருவாயில் இருந்தது. அவள் முகத்தில்—படத்தில்—மாத்திரம் கடைசியாக சில நுட்ப வேலைகள் செய்யவேண்டியது பாக்கியிருந் தது. அது முடிந்து விட்டால் தன் சித்திரத் திறமை யைப்பற்றி அவனுக்கே ஒரு பெருமையும், ஆறுதலும் ஏற்பட்டுவிடும் என்று எண்ணினுன். மூஸியோ நகருக்குச் சென்று விட்டபடியால், விட்ட வேலையை தொடர்ந்து முடிக்க எண்ணி தன் சித்திரசாலைக்குச் சென்றுன். வழக்கமாக வெலிரியா அந்த நேரத்தில் அவனுக்காக அங்கே காத்திருப்பது வழக்கம். அன்று அவளை அங்கு காணவில்லை. அவள்

Koviloor Acadamy

பேரைச் சொல்லிக் கூப்பிட்டுப் பார்த்தான். பதில் வரவில்லை. அவனுக்கு ஆச்சரியமாக யிருந்தது. அவளைத் தேடி பங்களாவெல்லாம் சுற்றிப் பார்த்தான். தோட்டத்திற்குள் ஓடிப்போய்ப் பார்த்தான். அங்கே ஒரு மூலையில், குறுகலான பாறையில் மறைவாக வீற்றிருக்கக் கண்டான். ஒரு பலகையின்மீது இரு கைகளையும் கோர்த்து முழங்காலைக் கட்டிக்கொண்டு, தலை கவிழ்த்தவண்ணம் உட்கார்ந்து, பின் பக்கமிருந்த மரத்தின்மீது சாய்ந்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பின் பக்கத்தில் நின்ற வனதேவதையின் சிலையின் வாயில் ஒரு குழல் இருந்தது. தன் கணவன் தன்னைத் தேடி வந்ததைக் கண்டு சந்தோஷங்கொண்ட அவள், அவன் கேட்ட கேள்விகளுக்குப் பதிலாக, தனக்கு லேசாக தலை வலித்ததென்றும், இப்போது சரியாகி விட்டதென்றும், சித்திரசாலைக்கு வரத் தயார்தான் என்றும் தெரிவித்தாள்.

பேபோ அவளை சித்திரசாலைக்கு அழைத்துப் போய் உட்காரவைத்து, சலாகையை எடுத்து வர்ணம் தீட்டலானுன். தான் நினைத்தபடி முடிக்க இயலாமல் போகவே அவனுக்குச் சலிப்புத்தட்டியது. ஒரு பெரிய தீர்க்கதரிசியின் முகத்தில் காணப்படும் தேஜஸ் அவள் முகத்தில் இருந்தது. அதைப் படத்திலும் பிரதிபலித்துக் காட்டவேண்டுமென்றுதான் அவன் பிரயாசைப் பட்டான். ஆனல் அவன் எதிர்பார்த்த அந்தப் பழைய தேஜஸ், இப்போது அவள் முகத்தில் காணப் படவில்லை. அவள் களைத்து முகம் வெளுத்து சோர்ந் திருந்தாள். ஆயினும் இயற்கையாக உள்ள அவள் முகவிலாசம் கூடவா இல்லாமல் போய்விடும் என்று

Koviloor Acadamy

அவன் யோசித்தான் வேலை ஓடவில்லை. சலாகையை எறிந்துவிட்டு "எனக்கு உற்சாகமில்லை. உன் முகமும் களைத்துச் சோர்ந்திருக்கிறது. சற்றுப் படுத்துப் புரண்டு ஆஸ்வாஸப் படுத்திக் கொள்" என்றான்.

"ஆமாம், எனக்கும் தலைவலி அதிகமாய்த்தானிருக்கிறது" என்று கூறிவிட்டு படுக்கை யறைக்குள் போய் விட்டாள் வெலிரியா.

பேபோ சித்திரத்தை சுவரின் பக்கம் திருப்பி வைத்துவிட்டு பேசாமல் சித்திரசாலையிலேயே உட்கார்ந்து விட்டான். அவன் மனதிற்குள் ஏதோ ஒருவித வேதனை வாள் போட்டு அறுத்தது. அது என்னவென்று அவனால் கண்டுகொள்ள முடியவில்லை. மூஸியோ தற்காலிகமாக தன் பங்களாவில் தங்கியிருப்பது—பேபோவே வலிய அவனைத் தங்கும்படி வற்புறுத்தியதால்தான். ஆனால் இன்று பேபோவிற்கு அது ஒரு குழப்பத்தையும், கஷ்டத்தையும் உண்டு பண்ணியது. இதனால் அவன் தன் நண்பன் மேல் பொறாமை கொண்டிருக்கிறான் என்ற அர்த்தமல்ல. வெலிரியாமீது அவன் பொறாமை கொள்ளமுடியுமா? மூஸியோ நண்பன்; வெலிரியா காதலி. இதிலென்ன அவ்வளவு வித்தியாசம்? ஆனால் அந்த நண்பனிடம் பழைய நட்பின் பெருமை தோன்றவில்லையே! மூஸியோ இதர தேசங்களில் சுற்றி யலைந்து, அங்கே வழங்கும் பழக்க வழக்கங்களிலும், விநோதமான ஆசாரங்களிலும், விபரீதமான நடவடிக்கைகளிலும் ஊறிப் போயிருந்தான். அவனுடைய மாய வித்தைகள், பாட்டுக்கள், புதுப்புதுச் சாமான்கள், அந்த ஊமை வேலைக்காரன், அவன் அணிந்திருந்த அங்கியிலிருந்து வெளிப்பட்ட ஒருவகை

Koviloor Acadamy

துர்நாற்றம், அவனுடைய கரடு முரடான மயிர், அவன் விடும் மூச்சு—பொதுவாக அவன் உருவமே பேபோவுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அவனிடத்தில் சிறிது பயம் கூட ஏற்பட்டது. அந்த ஊமையன் ஆகாரம் பரிமாறும்போது தன்னை ஏன் அடிக்கடி குறு குறுவென்று பார்க்கிறுனென்பதே பேபோவிற்கு விளங்கவில்லை. அவன் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து அவனுக்கு இத்தாலிய பாஷைகூடத் தெரியுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. அவனுக்கு நாக்கு இல்லை, பேசும் சக்தியை இழந்துவிட்டான். ஆயினும் அவனிடம் அபாரமான திறமைகள் உண்டு என்று மூஸியோ அவனைக் குறித்துச் சொன்னுன். அந்தத் திறமைதான் என்ன? நாக்கை இழந்த பின்னர் அதை அவன் எவ்வாறு அடைந்திருக்க முடியும்? இம்மாதிரி விஷயங்களெல்லாம் பிக்கவிசித்திரமாகவே இருந்தது. என்ன யோசித்தும் பேபோவிற்கு அதைப் பற்றி ஒன்றுமே விளங்கவில்லை.

பேபோ தன் மனைவியிருக்கும் அறைக்குள் நுழைந்தான். நன்ருக ஆடையணிந்து படுக்கையில் படுத்திருந்தாள்? தூங்கவில்லை. அவனுடைய காலடிச் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தாள். மறுபடியும் அவன் தன்னைத் தேடிவந்ததிற்காக தோட்டத்தில் அடைந்ததைப் போலவே சந்தோஷப்பட்டாள். படுக்கையில் அவளருகில் அமர்ந்தபடி, அவள் கையை எடுத்துத் தன் கையில் வைத்துக்கொண்டு, சிறிது நேரம் மௌனமாய் இருந்துவிட்டு, பிறகு "நேற்றிரவு நீ கண்டாயே அந்தப் பயங்கரமான, மறக்கமுடியாத கனவு, அது என்ன? மூஸியோ சொன்னுனே அவன்

Koviloor Acadamy

கண்ட கனவைப்பற்றி, அதுமாதிரியா அல்லது......" என்று கேட்டான்.

"இல்லே, இல்லே அந்தமாதிரியல்ல. ஏதோ ஒரு மாதிரியான மிருகம் என்னைக் குத்திக் கிழிக்கத் துரத்திக்கொண்டு வந்ததைப் போலக் கண்டேன்" என்று சட்டெனப் பதிலளித்தான் வெலிரியா.

"மிருகமா? மனிதரூபத்திலா" என்றான்.

"இல்லே, ஒரு காட்டு மிருகம்..............ஆமாம், காட்டு மிருகந்தான்" என்று சொல்லி விட்டு தன் முகத்தில் காணும் மாறுதல்களை அவன் கவனிக்கா வண்ணம் மறுபக்கம் திரும்பித் தன் தலையைத் தலையணைக்குள் புதைத்துக் கொண்டாள். அவளுடைய கையை சற்றுநேரம் அப்படியே பிடித்திருந்தான் பேபோ. பின்பு மெதுவாக அதைத் தூக்கி முத்தமிட்டு விட்டுக் கீழே வைத்தான்.

கணவனுக்கும் மனைவிக்கும் அன்று முழுதும் மனம் சஞ்சலப்பட்டுக்கொண்டே இருந்தது. தங்கள் தலைக்குமேல் ஏதோ ஒரு ஆபத்து இருப்பதாக அவர்களுக்குப் பட்டது. ஆனல் அது இன்னதுதானென்று சொல்ல முடியவில்லை. ஏதோ ஒரு விபரீத நிகழ்ச்சி அவர்களை அச்சுறுத்திக் கொண்டிருப்பதாக உணர்ந்தார்கள். இனி இருவரும் சேர்ந்தே இருக்கவேண்டுமென விரும்பினர்கள். ஆனல் ஒருவருக்கொருவர் என்ன தேறுதல் சொல்லிக் கொள்வதென்பது அவர்களுக்குத் தெரியவில்லை. பேபோ தன் மனைவியின் படத்தையாவது வரைந்து பூர்த்தி செய்யலாமா என்று யோசித்தான். இத்தாலி முழுதும் புகழ்பெற்று, அப்போதுதான் பெருராநகருக்கும் பரவியிருந்த ஒரு கவி

Koviloor Acadamy

யின் புத்தகத்தை எடுத்து வைத்துப் படிக்க முயன்ருன். ஒன்றுமே அவனுக்கு ஓடவில்லை. மாலையில் இருட்டிய பிறகு, சாப்பாட்டு நேரத்திற்குச் சரியாக, மூஸியோ நகரிலிருந்து திரும்பி வந்து சேர்ந்தான்.

7

மூஸியோ எவ்வித அதிர்ச்சியுமின்றி சர்வ சதாரணமாகவே காணப்பட்டான். சாப்பிடும்போது சில கதைகளும் சொன்ஞன்; அவர்களிருவரும் ஜெர்மன் சைனியத்தில் சேவை செய்தது, சார்லஸ் அரசனைப் பற்றிய செய்திகள், இம்மாதிரி பல விஷயங்களைச் சொன்ஞன். ரோமாபுரிக்குச் சென்று புதிதாக வந்திருக்கும் போப்பாண்டவரைப் பார்க்க விருப்பமிருப்பதாகவும் தெரிவித்தான். பேச்சுவாக்கிலேயே தன்னிடமிருந்த புதுவித ஒயினை ஊற்றி வெலீரியாவுக்குக் கொடுத்தான். அவள் வேண்டாமென்று மறுத்ததும், "ஆமாம், இப்போது இது தேவையில்லைதான்" என்று தனக்கே சொல்லிக்கொள்வது போலச் சொல்லி மழுப்பினுன்.

சாப்பாடு முடிந்ததும் கணவனும் மனைவியும் படுக்கையறைக்கு வந்து படுத்தவுடனேயே பேபோ அயர்ந்து தூங்கிவிட்டான். ஒருமணி நேரத்திற்குப் பின் விழித்துப்பார்க்கையில் தன்பக்கத்தில் வெலீரியா இல்லையென்பது அவனுக்குத் தெரிந்தது. சடாரென எழுந்தான். அதேசமயத்தில் அவள்படுக்கையறை உடுப்பு அணிந்திருந்தபடியே தோட்டத்திலிருந்து அறைக்குள் நுழைந்தாள். சற்று நேரத்திற்குமுன்பு தான் சிறுதூற்றல் தூறிக்கொண்டிருந்தது. எனினும்

Koviloor Academy

நிலா பால்போல் பிரகாசித்துக்கொண்டிருந்தது. உள்ளத்திலே எழுந்தபயத்தினுல், செயலற்ற முகத் தோற்றத்துடன் விரிந்த கண்களோடு நுழைந்த அவள், தட்டுத்தடுமாறி படுக்கையைத் தடவிக்கண்டுபிடித்து சந்தடி செய்யாமல் உடனே படுத்துக்கொண்டாள். பேபோ ஒருகேள்வி கேட்டான். அவள் பதிலளிக்கவில்லை. தூங்குவது போலிருந்துவிட்டாள். அவளை மெதுவாகத் தொட்டுப் பார்த்தான். தலைமயிரும், துணியும் மழைத்துளியினுல் நனைந்திருந்தன காலில் செருப்பணியாததால் பாதங்களில் மணல் ஒட்டிக்கொண்டிருந்தது. அவ்வளவுதான். குபீரென எழுந்து பாதி திறந்திருந்தகதவு வழியே தோட்டத்திற்குள் விரைந்தான். பட்டப்பகல்போல் எரிந்துக்கொண்டிருந்த நிலவொளியில் எல்லாப்பொருள்களும் வெகு துல்லியமாகத் துலங்கின. பேபோ தன்னைசுற்றிலும் கவனித்துப் பார்த்தான். மணலில் இரண்டுபேர் நடந்துபோயிருந்தது தெரிந்தது. ஒருவர்பாதம் பூட்ஸ் அணியாதது. அத்தடம் பங்களாவிற்கும், மூஸியோ தங்கியிருந்த இடத்திற்கும் மத்தியிலுள்ள ஒரு மல்லிகைப் புதர்வரை சென்றது. பேபோவுக்கு மூளை சுழல ஆரம்பித்தது. அப்படியே நின்றுயோசித்துக்கொண்டிருக்கையில் திடீரென முந்தியநாள் நள்ளிரவில் கேட்ட அதே கீதம கேட்டது. அவனுக்குத் திகில் ஏற்பட்டுவிட்டது. மூஸியோ இருக்கும் இடத்திற்கு ஓடிப்போய்ப் பார்த்தான். மூஸியோ அறையின் மத்தியில்நின்றுகொண்டு பிடிலை மீட்டிக்கொண்டிருந்தான். அவனிடம்நெருங்கி ஓடிப்போய் பதட்டத்துடன்'; நீ இப்போது தோட்டத்திற்குள் வந்துவிட்டு திரும்பினு

Koviloor Acadamy

யல்லவா? இந்த இடத்தைவிட்டு வெளியே போயிருந் தாயல்லவா? உன் ஆடையெல்லாம் மழையால் நனைந் திருக்கிறதே!" என்று சத்தம் போட்டான்.

"இல்லை......எனக்கு ஒன்றுமே தெரியாது...... இதைவிட்டு வெளியே சென்றதாக எனக்கு ஞாபகமே இல்லை" என்று திக்கித் திக்கி உளறினன் மூஸியோ. பேபோ ஓடிவந்த வேகத்தையும், பதட்டத்தையும் கண்டு அவனுக்கே ஆச்சரியமாகி விட்டது.

பேபோ அவன் கையை இறுகப் பிடித்துக் கொண்டு "நீ ஏன் அந்தப் பாடலையே மறுபடியும் பாடுகிறுய்? மறுபடியும் ஒரு சொப்பனம் கண் டாயோ" என்று கேட்டான்.

மூஸியோ இன்னும் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தான். ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"நான் கேட்பதற்கு வாய்திறந்து பதில்சொல்லு" என்று அவனை உலுக்கினன் பேபோ.

மூஸியோ பதில் சொல்லாமல் அடியிற் கண்ட பாட்டை முணுமுணுத்தான்.

"சந்திரன் வட்டமான கேடயத்தைப்போல இரும்பாகி
விட்டது.
நதி பாம்பைப்போல வளைந்து வளைந்து செல்லுகிறது.
நண்பன் விழித்துக்கொண்டிருக்கிருன்.
விரோதி உறங்கிக்கொண்டிருக்கிருன்.
இராஜாளி கோழிக் குஞ்சைத் தன் கூரிய நகங்களால் பற்
றிக்கொண்டிருக்கிறது.
உதவி! உதவி! உதவிவேண்டும் இப்போது!'

பேபோ அவன் கையை விட்டுவிட்டு இரண்டடி பின்னுக்கு நகர்ந்து, அவனையே விரைத்துப் பார்த்து,

Koviloor Acadamy

ஒரு கணம் ஏதோ சிந்தித்தான். பிறகு, தன் பங்களாவுக்குத் திரும்பிப் போய்விட்டான்.

தோள் பக்கமாகத் தலையைச் சாய்த்தவண்ணம், கைகளையெல்லாம் பரப்பியபடியே நன்முய்த் தூங்கிக் கொண்டிருந்தாள் வெலீரியா. அவனுல் அவளைச் சீக்கிரம் எழுப்ப முடியவில்லை. வெகுநேரம் கழித்து எழுந்ததும், அவனைப் பார்த்து அப்படியே அவன் கழுத்தைக் கட்டிப்பிடித்து இறுக அணைத்துக்கொண்டாள். அவள் தேகம் நடுங்கிக்கொண்டிருந்தது.

“என் கண்ணே! உனக்கு என்ன செய்கிறது? உடம்புக்கு எப்படியிருக்கிறது?” என்று ஆறுதலோடு திருப்பித் திருப்பி கேட்டான் பேபோ.

ஆனல் அவள் மயக்கத்தில் விழுந்தவள்போல அவன்மேலேயே சாய்ந்திருந்தாள். “அடே யப்பா, எவ்வளவு பயங்கரமான தோற்றங்களை நான் பார்க்கிறேன்” என்று முனகிக்கொண்டே தன் முகத்தை அவன்மேல் வைத்து அமுத்திக்கொண்டாள்.

அவன் அவளிடம் இன்னும் கேள்விகேட்க முயற்சித்தான். ஆனல் அவள் நடுக்கம் நிற்கவில்லை.

கடைசியாக, அவள் அப்படியே அவன் கரங்களில் சாய்ந்து நித்திரைசெய்ய ஆரம்பித்தபோது ஆதவனின் செங்கிரணங்களின் முதல் ஒளி பங்களாவின் ஜன்னல் கதவுகளில் வீசியது.

8

அடுத்த நாள் அதிகாலையிலேயே மூஸியோ எங்கோ போய்விட்டான். வெலீரியா தன் கணவனிடம், தான் பக்கத்திலுள்ள சந்யாசி மடத்திற்குப்

Koviloor Acadamy

போய்விட்டு வரவேண்டுமென்று கேட்டாள். அங்கே வயதுமுதிர்ந்த பாதிரி ஒருவர் இருந்தார். அவரிடம் அவளுக்கு அளவுகடந்த பக்தி. அவள் அங்கேபோவதைக் குறித்து பேபோ கேட்ட கேள்விகளுக்கு, அவளுக்கு கடந்த சிலநாட்களாக நடந்த சம்பவங்களினுல் மனதில் ஏதோ உறுத்திக்கொண்டிருப்பதாகவும், அதை ஆற்றுவதற்கு அப்பாதிரியிடம் சென்று பாவ மன்னிப்புக் கேட்கவேண்டுமென்றும் சொன்னுள். அச்சமயம் அவள் இருந்த நிலைமையையும், அவள் முகத் தோற்றத்தையும், கம்மிய குரலையும் கண்டு அவளுடைய தீர்மானம் சரியென்றே பட்டது அவனுக்கு.

புனிதமான அப்போதகர் லாரன்ஸோ அவளுக்குக் கட்டாயம் நல்ல புத்திமதிகளையும், ஆறுதலையும் எச்சரிக்கைகளையும் சொல்லி அவள் சந்தேகத்தை அகற்றமுடியும் என்பது அவன் நம்பிக்கை. ஆகையால் அவளை நான்குபேர் துணையோடு மடத்திற்கு அனுப்பி விட்டு, தான் பங்களாவிலேயே தங்கிவிட்டான். அவனுக்கு ஏற்பட்டிருந்த திராதசந்தேகத்தையும் தணிக்க, முடியாத கோபத்தையும் தீர்த்துக்கொள்ளவும், வெலீரியாவுக்கு முந்தின நாளிரவு என்ன தான் நேர்ந்தது என்பதை அறிந்துகொள்ளவும் தீர்மானித்து, அவள் சந்யாசி மடத்திலிருந்து திரும்பிவரும் வரை தோட்டம் முழுதும் சுற்றியலைந்து ஆராய்ந்து கொண்டிருந்தான். மறுபடியும் மூஸியோ தங்கியிருந்த இடத்திற்குப் போனுன். ஆனுல் மூஸியோ இன்னும் திரும்பி வரவில்லை. அந்த ஊமை வேலைக்காரன் பேபோவை இமைகொட்டாமல் சிலைபோல் அசைவற்று முறைத்துப் பார்த்தான். தலையை ஒருவிதமாகச் சாய்த்துக்

Koviloor Acadamy

கொண்டு அவன் பார்த்த பார்வையில், அந்த வெங்கலம் போன்ற முகத்தில், ஒரு கேலிக் குறிப்பு தென்பட்டது.

வெலீரியாவுக்கு பங்களாவில் நடந்த சம்பவங்களால் ஏற்பட்ட அவமானத்தைக் காட்டிலும் பயமே அதிகமாயிருந்தபடியால் அவள் பாதிரியிடம் ஒன்றையும் ஒளிக்காமல் நடந்தது நடந்தபடி சொன்னுள். அவரும் மிகக் கவனமாகக் கேட்டு, அவள் தன்னையறியாமல் செய்த பாவகிருத்தியங்களுக்காக அவளை மன்னித்து, ஆசிர்வாதம் செய்தார். "மாயம், மந்திரம் கொடிய சூன்யம்...உம்......இவைகளையெல்லாம் இப்படியே விட்டுவிடக்கூடாது" என்று தனக்குள் எண்ணிக்கொண்ட அவர், அவளுக்கு இன்னும் ஆறுதல் ஏற்படவேண்டி அவளோடு பேபோவின் பங்களாவிற்கே வந்தார்:

பாதிரியே தன் வீடு தேடி வந்ததைக் கண்ட பேபோ ஆச்சரியப்பட்டான். வயது முதிர்ந்து, வாழ்க்கையில் அநுபவம்பெற்ற அவர் அவனிடம் இந்த விஷயங்களை எவ்வாறு சொல்லவேண்டுமென்று முன்கூட்டியே யோசித்து வைத்திருந்தார். பாதிரியைத் தன் கணவனிடம் விட்டுவிட்டு வெலீரியா உள்ளே போய்விட்டாள். அவர்களிருவரும் தனித்திருந்தபோதிலும். பாதிரியார் வெலீரியா தன்னிடம் கூறிய ரகசியங்களை பேபோவிடம் சொல்லவில்லை. அவர் அவனுக்கு உபதேசித்து இதுதான். "நீ வலிய அழைத்து வந்து வைத்திருக்கும் உன் விருந்தாளி மூஸியோ தன் கதைகளினுலும், பாட்டுகளினுலும், நடத்தையினுலும் வெலீரியாவின் மூளையைக் குழப்பி

Koviloor Acadamy

விட்டிருக்கிறான். முடியுமானால் உடனே அவனை இங்கேயிருந்து வெளியேற்றிவிடு. எனக்கும் அவனைத் தெரியும். சிறு வயதிலேயே அவனுக்கு ஸ்திரமான புத்தி கிடையாது என்று எனக்கு ஞாபகமிருக்கிறது. இப்போதோ அவன் கிறிஸ்துவ மதம் பரவாத நாடுகளில் வெகு நாட்கள் சுற்றியலைந்து திரிந்துவிட்டு வந்திருக்கிறான். ஆகையால் அவன் அங்கிருந்து தீய பழக்க வழக்கங்களைப் பயின்று வந்திருப்பான். மந்திர தந்திரங்களை யெல்லாம்கூடக் கற்றுக்கொண்டு வந்திருப்பான். ஆகையால் அவன் உனக்குப் பழைய நண்பனாயிருந்தாலும் அவனை விட்டுப் பிரிந்திருப்பதே உத்தமம் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார்.

பேபோவும் அப்படியே செய்ய ஒப்புக்கொண்டான். வெலீரியாவிடம் அவன் தன் முடிவைத் தெரிவித்தபோது அவள்கூட ஆச்சரியமடைந்து விட்டாள். கணவனும் மனைவியும், சந்யாசி மடத்தின் அபிவிருத்திக்கும், ஏழைகளின் உதவிக்கும் அப்பாதிரியிடம் ஏராளமான பொருள் அளித்து அவரை வழியனுப்பினார்கள்.

இரவு போஜனத்திற்குப் பின்பு மூஸியோவிடம் நேரிலேயே எல்லாவற்றையும் சொல்லிவிட எண்ணியிருந்தான் பேபோ. ஆனால் அந்த விநோத விருந்தாளி, வெளியே சென்றவன், திரும்பி வரவில்லை. அடுத்த நாள் காலை அவனைப் பார்த்துப் பேசிக்கொள்ளலாமெனத் தீர்மானித்து தம்பதிகளிருவரும் படுக்கையறைக்குப் போய்விட்டார்கள்.

Koviloor Acadamy

௯

வெலீரியா படுத்தவுடனேயே தூங்கிப் 'போய் விட்டாள்; பேபோவிற்கு தூக்கமே வரவில்லே. அவன் கண்ட காட்சிகள், அநுபவித்த நிகழ்ச்சிகள், எல்லாம் அந்த நிசப்தமான இரவில் அலேயலேயாக மனதில் எழுந்து விதவிதமான அர்த்தங்களே உண்டுபண்ணின. அவைகளேப்பற்றி அவன் தனக்குள்ளேயே கேட்டுக் கொண்ட வினுக்களுக்கு ஒரு பதிலுமே தென்பட வில்லே. உண்மையிலேயே மூஸியோ மந்திரவாதிதானு? ஏற்கனவே அவள் வெலீரியாவுக்கு விஷத்தைக் கொடுத்துவிட்டாளே? அவள் அசௌக்கியமாய்த்தா னிருந்தாள்......ஆனல் என்ன வியாதி? தலேயணேமீது கையை ஊன்றி தன் தலேயைத் தாங்கிக்கொண்டு இவ்விதமெல்லாம் யோசித்துக்கொண் டிருந்தான் பேபோ. நிர்மலமான ஆகாயத்தில் மேலே கிளம்பிய சந்திரன் தன் கதிர்களே ஜன்னல் வழியாக அறையி னுள் வீசினுன். அந்த ஒளியோடு மூஸியோ இருந்த இடத்திலிருந்து கிளம்பிய சத்தமும் காற்றில் கலந்து வந்தது. அல்லது பேபோவுக்குத்தான் அப்படித் தோன்றியதோ என்னவோ? நறுமணமுள்ள காற் றில் கலந்து வந்த அந்தச் சத்தம் மிக இலேசாக காதல் கீதத்தை இசைத்தது. அதே சமயத்தில் வெலீரியாவும் படுக்கையிலிருந்து மெதுவாக எழுந் திருக்க ஆரம்பித்தாள். அவன் கூர்ந்து அவளேயே கவனித்தான். அவள் எழுந்து சந்தடி செய்யாமல் ஒரு காலே எடுத்துக் கீழே வைத்து, மறு காலேயும் அம்மாதிரியே வைத்து மங்கலான கண்களால் நேரே

Koviloor Acadamy

பார்த்துக்கொண்டு, கைகளை முன்னுல் நீட்டியபடியே, தூக்கத்தில் எழுந்து தன் நினைவின்றி நடந்து செல்லும் வியாதியுடையவளைப்போல, தோட்டத்துப் பக்க கதவை நோக்கிப் போனுள்! பேபோ சட்டென்று படுக்கையறையின் மற்ருெரு வழியாக குதித்து அறையைச் சுற்றி வெளியே ஓடி வந்து அந்தத் தோட்டத்துக் கதவை வெளிப் பக்கம் தாளிட்டு விட்டான். உள்ளேயிருந்து யாரோ தன் பலங் கொண்டமட்டும் திறக்க முயற்சிப்பது தெரிந்தது. முடியாமற் போகவே பயத்தினுல் எழுந்த முணு முணுப்புக் கேட்டது.

"மூஸியோ பட்டணத்திலிருந்து திரும்பி வந்திருக்க முடியாது ஆம்! நிச்சயம் முடியாது" என்ற எண்ணம் பளிச்சென்று உதயமாயிற்று பேபோவுக்கு. உடனே அவனிருப்பிடத்தை நோக்கி ஓடினுன், உண்மையை அறிய.

அங்கே அவன் கண்டதென்ன?

தகதகவெனக் காயும் சந்திர வெளிச்சத்தில் கைகளை நீட்டிய வண்ணம், உயிரிழந்த கண்களை அகல விரித்துப்பார்த்துக்கொண்டே அவனைச்சந்திக்க வந்துகொண்டிருந்தான் மூஸியோ! பேபோ அவனை நோக்கியே ஓடினுன். எதிரே வந்த மற்றவன் இவனைக் கவனியாமலே மேல்நோக்கி ஒரே மாதிரியாக அடியை அளந்து நடந்து சென்ருன். முகம் அந்த ஊமையனைப்போலவே இருந்தது. அதில் லேசாக சிரிப்புக்கூடக் காணப்பட்டது. பேபோ அவன் பெயரைச் சொல்லிக் கூப்பிடலாம் என்று நினைத்தான்.

Koviloor Acadamy

ஆனல் அதே சமயத்தில் பங்களாவின் ஜன்னல் கதவு திறக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அவனுடைய படுக்கையறையின் ஜன்னல் கதவு திறந்திருந்தது. ஜன்னலில் நின்றுகொண்டிருந்தாள் வெலீரியா. அவள் கையை விரித்து மூஸியோவுக்காகத் தன்னை அர்ப்பணம் செய்பவள் போலத் தோன்றினுள்

கரைகடந்த கோபம் எழுந்துவிட்டது. பேபோ விற்கு "சண்டாள மாயாவிப் பயலே" என்று கத்திக்கொண்டே மூஸியோவின்மேல் வேகமாய்ப் பாய்ந்து, அவன் கழுத்தை இறுகப்பிடித்துக்கொண்டு, இடைக்கச்சையிலிருந்த உடைவாளை உருவி ஓங்கி நெஞ்சில் குத்திவிட்டான். கைப்பிடிவரை வாள் பதிந்து விட்டது.

மூஸியோ ஒருவித கிச்சுக் குரலிட்டு வாள் பாய்ந்த இடத்தை கையால் அழுத்திய வண்ணம் தன்விருப்பிடத்திற்கு திரும்பி ஓடிவிட்டான். பேபோ வின் கத்தி மூஸியோவின் நெஞ்சில் பாய்ந்த அதே வினடி வெலீரியாவும் கிச்சுக் குரலில் சத்தமிட்ட படியே தடாலென ஜன்னல்மேலிருந்து கிழே தரை யில் விழுந்துவிட்டாள்.

ஓட்டமாக ஓடி அவளை வாரி யெடுத்து, தூக்கிக் கொண்டு போய்ப் படுக்கையில் கிடத்தி ஏதேதோ பேசிப் பார்த்தான்.

வெகு நேரம் அவள் பேச்சு மூச்சற்றுக் கிடந் தாள். கடைசியாகக் கண்களைத் திறந்து நீண்ட பெருமூச்சுவிட்டு, யமன் வாயிலிருந்து மீட்கப்பட்ட வள் போல சொல்ல முடியாத ஆனந்த உணர்ச்சி யுடன் தன் கணவனைக் கண்டு களி பொங்கி, அவன்

Koviloor Acadamy

கழுத்தில் கையைக் கோர்த்து தன் மார்போடு சேர்த்து அழுத்தி அணைத்துக்கொண்டாள்.

"நீங்களா......நீங்களா.........நீங்களா இது?" என்று திக்கித் திக்கிப் பேசினாள். மெதுவாக அவள் பிடி தளர்ந்தது. தலை பின்பக்கம் சாய்ந்தது. ஏதோ முனகிக்கொண்டு புன்னகை புரிந்தாள். "அப்பாடா, எல்லாம் தீர்ந்து விட்டது. ஆனால் எனக்கு மிகவும் களைப்பாயிருக்கிறது" என்று சொல்லிய வண்ணமே கண்ணயர்ந்தாள்.

10

பேபோ படுக்கையில், அவள் சமீபத்தில் உட்கார்ந்தபடியே, அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் முகம் வெளுத்துப்போய் ஜீவனற்றுக் கிடந்தது. கடந்துபோன நிகழ்ச்சிகளெல்லாம் அவன் மனதிலே வந்து மறைந்தன. இனி என்ன செய்வது என்ற பிரச்னையும் எழுந்தது. அவன் செய்ய வேண்டியது என்ன இருக்கிறது? அவன் கத்தி எவ்வளவு ஆழமாகப் பாய்ந்தது என்று நினைக்கையில், கட்டாயம் மூஸியோ இறந்து போயிருப்பான் என்றே தீர்மானித்தான். அப்படியானால் அதை மறைப்பது சுலபமல்ல. அரசனிடம் அதைப்பற்றிச் சொல்லியாக வேண்டும். நியாயாதிபதிகள் முன் உண்மையைக் கூற வேண்டும். ஆனால் சொல்லத் தகாத காரணத்தை அவர்களிடம் எப்படி விளக்குவது? அவன் தன் பங்களாவில், தன் ஆப்த நண்பனைக் கொலை செய்து விட்டான்! ஜனங்களெல்லாம் "எதற்காக? இதன் காரணம் என்ன?" என்று வினவுவார்கள். அவன் என்ன

Koviloor Acadamy

சொல்வான்; எதை வெளியிடுவான்? ஆனால் அவன் மூஸியோவைக் கொல்லாமலிருந்தால் தான் என்ன? இம்மாதிரி வதைக்கும் எண்ணங்களை அவனால் சகிக்க முடியவில்லை. வெலிரியா நன்றாய்த் தூங்கி விட்டா ளென்று நிச்சயமாய்த் தெரிந்ததும், சந்தடி செய்யா மல் எழுந்து மூஸியோ இருப்பிடத்தை நோக்கிப் புறப் பட்டான். எங்கும் நிசப்தம்; ஒரே ஒரு ஜன்னலி லிருந்து வெளிச்சம் தெரிந்தது. கதவை மெதுவாகத் திறந்தான். அதன் கைப்பிடியில் இரத்தக்கறை யிருந்தது. மணலில் சிந்தியிருந்த இரத்தத் துளிகள் கருப்பாகக் காணப்பட்டன. மனதில் ஒருவித வருத் தத்துடனே முதல் அறையைத் தாண்டினான். அடுத்த வாசற்படியில் கால் வைத்ததும் ஆச்சரியத்தால் அப் படியே ஸ்தம்பித்து விட்டான்.

அறையின் மத்தியில் விரிக்கப்பட்டிருந்த பாரசீக தேசத்துக் கம்பளியின்மேல், பூ வேலையால் அலங்கரிக் கப்பட்ட தலையணையைத் தலைக்கு வைத்து, உடம்பெல் லாம் இரத்தச் சிவப்பு நிறக் கம்பளியால் மூடிக் கொண்டு படுத்திருந்தான் மூஸியோ. அவனுடைய அவயவங்களெல்லாம் போட்டது போட்டபடியே கிடந்தன. முகம் மஞ்சள் அரக்குப்போல மாறி விட் டது. மூடியிருந்த கண்ணிமைகள் நீல நிறமாகி விட் டன. மூச்சு விடுவது கூடத் தெரியவில்லை. இறந்த வன் போலவே காணப்பட்டான். அவன் கால்மாட் டில் சிவப்புச் சால்வையைப் போர்த்திக்கொண்டு முழங்கால் மண்டியிட்டு உட்கார்ந்திருந்தான் ஊமை யன். அவன் இடது கையில் ஒரு மூலிகை இருந்தது. தன் எஜமானனைப் பார்த்துக் குனிந்து கொண்டிருந்

Koviloor Acadamy

தான். வேறெதிலும் அவன் கவனம் செல்லவில்லை. தரையில் ஒரு விளக்கு ஊன்றி வைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து எரிந்த பச்சை ஒளி அந்த அறையெல் லாம் பிரகாசமாக்கியது, ஆனால் அதன் சுடர் அசைய வில்லை. புகையும் கிளம்பவில்லை.

பேபோ உள்ளே நுழைந்ததைக் கண்டு ஊமை யன் எழுந்திருக்கவில்லை. அவனைத் திரும்பிப் பார்த்து விட்டு,தன் எஜமானன் பக்கம் திருப்பிக்கொண்டான். அடிக்கடி அவன் முன்னால் குனிந்து, கையிலிருந்த மூலிகையைத் தன் எஜமானன் முகத்தருகே இப்படி யும் அப்படியும் ஆட்டினன். அப்போது அவன் உதடு கள் திறந்து திறந்து மூடின. ஏதோ புரியாத பாஷை யை அவன் முணுமுணுத்தான் போலும். மூஸியோ விற்கும் ஊமையனுக்குமிடையே பேபோவினுடைய கத்தி தரையில் கிடந்தது. அதை அந்த ஊமையன் தன் கையிலிருந்த மூலிகையால் அடித்தான். ஒரு நிமிஷம்........இரண்டு நிமிஷம் இப்படியே கடந்தது. பேபோ அவனிடம் நெருங்கி குனிந்து மெதுவாக "இறந்து விட்டானு?" என்று கேட்டான். அதற்கு அவன் போர்வைக் குள்ளிருந்த வலது கையை வெளியே எடுத்து, முகத்தில் கோபக்குறி தோன்ற, வெளிப் பக்கத்துக் கதவைச் சுட்டிக் காட்டினன். பேபோ மறுபடியும் அதே கேள்வியைக் கேட்க முயன் ருன். ஆனல் ஊமையனே கண்டிப்புடன் கதவுப் பக்கம் கையைக் காட்டிக் கொண்டே யிருந்தான். பேபோவிற்குக் கோபமும், ஆத்திரமும் பொங்கியது. எனினும் பேசாமல் வெளியே வந்து விட்டான்.

Koviloor Acadamy

வெலிரியா முன்போலவே தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் அமைதி தேங்கி யிருந்தது. அவள் உடையைக் களையவில்லை. ஜன்னல் அருகில் வந்தமர்ந்து, கட்டையில் கையை ஊன்றி, தலையைத் தாங்கிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். பேபோ. சூரியோதயம் ஆன பிறகுகூட அவன் அதே இடத்தில் தான் இருந்தான். வெலிரியாவும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை.

11

அவன் எழுந்திருந்த பிறகுதான் நகருக்குப்போக எண்ணியிருந்தான் பேபோ. அப்போது யாரோ திடீரெனப் படுக்கையறைக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தான். வயது முதிர்ந்த அவனுடைய வேலையாள் அன்டோனியா நின்று கொண்டிருந்தான்.

"ஊமையன் எங்களிடம் வந்து மூஸியோ அசௌகரியமாய்ப் படுத்திருப்பதாயும், தன்னுடைய சாமான்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு நகருக்குப் போக வேண்டுமென விரும்புவதாகவும் தெரிவித்தான். ஆகையால் நீங்கள் தயவுசெய்து சில ஆட்களையனுப்பி சாமான்களையெல்லாம் கட்டி ஒழுங்கு செய்ய வேண்டுமென்றும், மத்தியானம் சாப்பாட்டு வேளைக்கு சில குதிரைகளையும், சில ஆட்களையும் காவலுக்கு அனுப்ப வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டான். நீங்கள் அதற்குச் சம்மதிப்பீர்களா, அனுமதி யளிப்பீர்களா?" எனக் கேட்டான்.

Koviloor Acadamy

"அந்த வேலைக்காரனா உன்னிடம் இதைச் சொன்னான்? எப்படிச் சொன்னான்? அவன் ஊமையாயிற்றே!"

"இதோ பாருங்கள், இந்தக் காகிதத்தில் நம் பாஷையில் திருத்தமாக அவன் எழுதிக் காண்பித்தான்."

"அப்படியானால் மூஸியோ சிக்காக இருக்கிறானென்றா நீ சொல்லுகிறாய்?"

"ஆமாம், கடுமையான நோய். அவரைப் பார்க்க முடியாது."

"டாக்டருக்கு ஆள் அனுப்பவில்லையா?"

"இல்லை. அந்த ஊமையன் அதற்கு இணங்க மாட்டேனென்கிறான்."

"அவனே தானா இதை எழுதினான்?"

"ஆமாம். அவனேதான்."

போபோ சிறிதுநேரம் ஒன்றும் பேசவில்லை.

"சரி, வேண்டிய ஏற்பாட்டைப் போய்ச் செய்து கொடு" என்று சொல்லி யனுப்பினான்.

அன்டோனியோ போய்விட்டான்.

போபோ அவனையே பார்த்துக்கொண்டு நின்றான். அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. "அப்படியானால் அவன் சாகவில்லையா?" என்று எண்ணிக் கொண்டான். சந்தோஷப்படுவதா, துக்கப்படுவதா என்று அவனுக்குப் புரியவில்லை.

"அவன் நோயாகவா கிடக்கிறான்?"

சற்றுநேரத்திற்கு முன்புதான் அவன் பிணம் போல் கிடந்தானே?

Koviloor Acadamy

போபோ வெலீரியாவின்பக்கம் திரும்பி வந்தான். அவள் விழித்துக்கொண்டு தலையைத் தூக்கினாள். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

“அவன் அப்பொழுதே இறந்துவிட்டானா ?” என்று திடீரெனக் கேட்டாள் வெலீரியா.

பேபோ பீதியடைந்து விட்டான்.

“என்ன,...அவன் இறக்கவில்லையா? போய்விட்டானா ?” என்று மேலும் கேட்டான்.

“இன்னும் போகவில்லை. இன்றைக்குப் போய் விடுவான்” என்றான் பேபோ. அவனுக்கு ஆறுதலேற்பட்டதுமாதிரி யிருந்தது.

“அவனை இனி ஒருகாலும் நான் பார்க்க மாட்டேனே ?”

“இல்லை. பார்க்கவே மாட்டாய்.”

“அம்மாதிரிக் கனவுகள் வராதே ?”

“வரவே வராது.”

“அப்பா” எனப் பெருமூச்சுவிட்டாள் வெலீரியா. அதில் ஆழ்ந்த ஒரு ஆறுதல் தொனித்தது. அவள் உதடுகளில் புன்னகை அரும்பியது. தன்னிரு கைகளையும் விரித்து பேபோவைக் கட்டிக்கொண்டாள்.

“நாம் இனி அவனைப்பற்றிப் பேசவே கூடாது. என்ன, நான் சொல்லுகிறது தெரிந்ததா? அவன் இந்த இடத்தைவிட்டுப்போகும் வரைநான் இந்த அறையை விட்டு வெளியே வரவே மாட்டேன். இப்போது என் வேலைக்காரப் பெண்களை வரச்சொல்லுகிறீர்களா?... இருங்கள், அதோ அதை எடுங்கள்” என்று கூறி

Koviloor Acadamy

வெலீரியா சுவரில் தொங்கிக்கொண்டிருந்த முத்து மாலையைக் காட்டினுள். அது மூஸியோவால் கொடுக்கப்பட்டது. "இதை நம்முடைய ஆழமான கிணற்றில் வீசி எறியுங்கள். நான் உங்களுடைய வெலீரியா. என்னைக் கட்டி யணையுங்கள். ...அந்த மனிதனை கிளப்பி அனுப்பிவிட்டு என்னிடம் வாருங்கள்" என்ருள்.

பேபோ அந்த முத்துமாலையை எடுத்துப் பார்த்தான். முத்துக்களெல்லாம் ஒளிகுன்றிப் போய்விட்டன. தன் மனைவியின் விருப்பப்படியே அதை கிணற்றில் போட்டுவிட்டான். பின்னர் அவன் மூஸியோ இருக்குமிடத்திற்கு சற்று தூரத்திலிருந்தபடியே தோட்டத்திற்குள் உலாத்தியபடி. கவனித்துக்கொண்டிருந்தான். அங்கே சாமான்களை மூட்டைகட்டும் வேலை ஏற்கனவே ஆரம்பமாகி இருந்தது. வேலைக்காரர்களெல்லாம் பெட்டிகளைத் தூக்கிக்கொண்டும், குதிரைகளின்மீது ஏற்றிக்கொண்டு மிருந்தனர். ஆனல் அந்த ஊமையனை அங்கு காணவில்லை. உடனே அந்த இடத்தில் என்ன நடக்கிறதென கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான் பேபோ. மூஸியோ இருந்த அறைக்குப் பின் பக்கம், ஒரு ரகசிய வழி இருக்கிறதென்பதும், அதன் வழியாக ஒருவர் உள்ளே போய்விடலாமென்பதும் அவன் ஞாபகத்திற்கு வந்தது. உடனே மெதுவாகச் சென்று, பூட்டாமலிருந்த அந்தக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். பிறகு மெள்ள திரையை லேசாக விலக்கிக்கொண்டு கவனித்தான்.

12

மூஸியோ படுக்கையில் இல்லை. பிரயாண உடையணிந்து சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்தான். முன்பு தோன்றியபடியே சவம்போலத்தான் காணப்பட்டான் அவன். மூஸியோவின் தலை நாற்காலியின் பின்பக்கம் சாய்ந்திருந்தது. மஞ்சளாக மாறிப் போயிருந்த கைகள் முழுங்கால்மீது அசைவற்றுக் கிடந்தன. மார்பு விம்மி அமுங்கவில்லை. நாற்காலியைச் சுற்றித் தரையில், காய்ந்த மூலிகைகள் சிதறிக் கிடந்தன. அநேக கோப்பைகளில் கருப்பாக ஏதோ திராவகம் வைக்கப்பட்டிருந்தன. அவைகளிலிருந்து எழுந்த நாற்றம் மூச்சைத் திணறச் செய்தது. ஒவ்வொரு கோப்பையைச் சுற்றிலும் செப்புத் தகடு போன்ற நிறத்தில் ஒவ்வொரு பாம்பு கிடந்தது. அவைகள் பொன்போல இங்குமங்கும் மின்னிக்கொண்டிருந்தன. மூஸியோவுக்கு நேர் எதிரில் அந்த ஊமையன் நின்றுகொண்டிருந்தான். அவன் அணிந்திருந்த ஆடைகள் ஆடம்பரமாக இருந்தன.

ஆனால் அவன் அசையாமல் நின்றுகொண்டிருக்கவில்லை. நன்றாக நிமிர்ந்து நின்று, எதெதையோ எடுத்து அர்ப்பணம் செய்து ஜபம் செய்தான். கைகளை அகல விரித்து மூஸியோ பக்கம் நீட்டி தன்னிடம் வரும்படி சமிக்கை செய்தான். அவன் புருவங்கள் ஏறியும், இறங்கியும் வந்துகொண்டிருந்தன. இப்படியெல்லாம் அவன் செய்வது அவனுக்கு உபத்திரவத்தைக் கொடுத்ததாகவும் தெரிந்தது. முகத்திலிருந்து வியர்வை வடிந்துகொண்டேயிருந்தது. அடுத்தபடி

Koviloor Acadamy

யாக அவன் ஓரிடத்தில் ஸ்திரமாக நின்று கொண்டு சுவாசத்தை நன்ருக உள்ளே இழுத்து, ஒரு தினுசாகச் சத்தம் போட்டு, முன்னுல் குனிந்து, வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் குதிரையின் கடிவாளக் கயிற்றை இழுத்து பிடிப்பவன் போல, தன் முஷ்டியைத் தன் மார்புக்கு நேராக விரைப்பாகக் கொண்டு வந்தான். அப்போது மூஸியோவின் தலை மாத்திரம் நாற்காலியிலிருந்து பிரிந்து ஊமையன் கைக்கு வந்து சேர்ந்தது! மறைந்து நின்று பார்த்துக்கொண்டிருந்த பேபோவுக்கு வெலவெலத்துப்போய்விட்டது. ஊமையன் கைகளைத் தளர்த்தியதும் மூஸியோவின் தலை முன்போலவே நாற்காலிக்குப் போய்விட்டது. இப்படியாக அவன் அந்த வேடிக்கையைப் பல தடவைகள் செய்தான். தலையும் அவனிடம் வந்து வந்து திரும்பியது. கோப்பைகளிலிருந்த கருப்புத் திராவகம் 'தள தள' வென்ற சத்தத்துடன் கொதிக்க ஆரம்பித்தது. அக்கோப்பைகளே ஒரு மாதிரி சப்தத்தைக் கிளப்பின. அவைகளைச் சுற்றிச் சுருண்டு கிடந்த செப்பு நிறச் சர்ப்பங்கள் கரகரவெனச் சுற்றி வந்தன. ஊமையன் ஒரு அடி முன்னுல் சென்று, தன் புருவங்களை நெறித்து மேலே உயர்த்திக் கண்களை அகல விரித்து மூஸியோவைப் பார்த்துத் தலையை ஆட்டினுன். மூஸியோவின் கண்ணிமைகள் படபடவென்று அடித்துக்கொண்டு இலேசாகத் திறந்தன. அதன் கீழிருந்த கருவிழிகள் ஈயத்தைப் போல வெளுத்து இறுகிப் போய்க் காணப்பட்டன. ஊமையன் முகத்தில் கரைகடந்த வெற்றியின் எக்களிப்பும், ஒரு பயங்கரமான ஆனந்தவெறியும் தெறித்தது. உதடுகள்

Koviloor Acadamy

விரிந்தன. ஏதோ பேச முயன்ற அவனுக்கு, தொண்டையிலிருந்து ஒரு நீண்ட குரல்தான் எழுந்தது. மூஸியோவின் உதடுகளும் விரிந்தன. ஊமையனுக்கு ஏதோ பதிலளிக்க முயன்ற மூஸியோவிற்கும் மிகமிக மெல்லிய நடுக்கக் குரல்தான் வெளிப்பட்டது.

இம்மாதிரிக் கோரக் காட்சிகளை பார்த்துக் கொண்டே நிற்க பேபோவிற்கு தைரியமில்லை. ஏதோ பேய் செய்யும் விபரீதங்களையெல்லாம் தான் பார்த்துக் கொண்டிருப்பதாகவே எ்ண்ணினன். அவ்வளவு தான். 'கிரிச்' என்ற சத்தமிட்டுக் கொண்டே, திரும்பிக்கூடப் பாராமல் தோட்டத்தில் விழுந்தடித்து ஓடி தன் பங்களாவை யடைந்தான்.

13

மூன்று மணி நேரங்களுக்குப் பின் அன்டோனியோ, பேபோவிடம் வந்து, எல்லா வேலையும் முடிந்துவிட்டதென்றும், மூஸியோ புறப்படுவதற்குத் தயார் செய்துகொண்டிருக்கிறதாகவும் தெரிவித்தான். அவனுக்கு ஒரு வார்த்தைகூடப் பதில் சொல்லாமல், பேபோ மேல் தளத்திற்கு வந்து அங்கேயிருந்தபடியே மூஸியோ இருக்கும் இடத்தைக் கவனித்தான். பல குதிரைகளின்மீது சாமான்கள் ஏற்றித் தயாராய் நிறுத்தப்பட்டிருந்தன. வேகமாய்ச் செல்லக்கூடிய, நல்ல திடகாத்திரமான கருப்புக் குதிரையின் மீது இருவர் அமர்ந்து செல்லும்படியாக ஒரு அழகான சேணமிடப்பட்டிருந்தது. தலையில் தொப்பிகூட இல்லாமல் சில வேலையாட்களும், கத்தியை ஏந்திய ஒரு காவற்காரனும் தயாராக நின்றார்கள். மூஸியோவின் அறைக்

Koviloor Acadamy

கதவு திறக்கப்பட்டது. ஊமையனின் கைத் தாங்கலில் மூஸியோ மெதுவாக வெளியே வந்தான். அவன் முகமும், கை கால்களும் வெளுத்துச் சவம்போல் காணப்பட்டான். எனினும் அவன் ஒவ்வொரு காலாக எடுத்தடி வைத்து நடந்தே வந்தான். குதிரை மீதேறி நேராக நிமிர்ந்து உட்கார்ந்து கடிவாளத்தையும் நடுங்கிக்கொண்டே பிடித்துக்கொண்டான். உடனே குபீரென ஊமையனும் குதிரைமீது தாவி ஏறி மூஸியோவிற்குப் பின்பக்கம் அமர்ந்து அவன் இடுப்பில் தன் கைகளைக் கோர்த்து ஜாக்கிரதையாகப் பிடித்துக்கொண்டான். பிறகு எல்லோரும் புறப்பட்டார்கள். குதிரைகள் எல்லாம் முதலில் சென்றன, சாதாரண நடை வேகத்தில். பேபோவினுடைய பங்களாவிற்கு எதிரில் வந்தபோது மாடிமீதிருந்த பேபோ மூஸியோவைக் கூர்ந்து கவனித்தான். அவன் முகத்தில் இரண்டு வெள்ளைப் பொட்டுகள் மின்னின. ஒரு சமயம் அந்த ஊமையன் தான் கண்களை அப்படி மாற்றிவிட்டானே? பேபோவைக் கண்ட ஊமையன் மாத்திரம் அலட்சியமாக மரியாதை செலுத்தினன்.

வெலீரியா இந்த கூத்தையெல்லாம் பார்த்திருப்பாளோ, என்னவோ? யார் கண்டது? ஜன்னல் கதவுகளெல்லாம் சாத்தப்பட்டுத்தானிருந்தன, ஒரு வேளை அவள் கதவிற்குப் பின் மறைந்து நின்றிருக்கலாம்.

Koviloor Acadamy

Koviloor Acadamy

ஜோதி வெளியீடுகள்

			ரூ.	அ.
மலரும் மணமும் (கதைகள்)		பி. எஸ். ராமையா	4	0
சினிமா (படங்களுடன்)		பி. எஸ். ராமையா	3	8
விஜயம் (நாவல்)	...	வ. ரா.	3	8
விடி வெள்ளி (கதைகள்)		ரா. ஆறுமுகம்	3	8
ஊர்வசி (நாடகங்கள்)		ந. சிதம்பர சுப்ரமண்யன்	2	8
சின்னச் சாம்பு (நாவல்)	...	வ. ரா.	1	8
உஷா (நாவல்)	...	சரத் சந்திரர்	1	8
அபலே (கதைகள்)		என். எஸ். ஸ்ரீநிவாஸன்	1	12
மணல் வீடு (கதைகள்)		சி. சு. செல்லப்பா	1	0
துருக்கி (அரசியல்)		எஸ். எஸ். மாரிசாமி	1	0
தீனக் குரல் (நாவல்)		ரா. வெங்கடாசலம்	1	0
மாய சந்யாசி (ரஷ்ய நாவல்)		ரா. ஸ்ரீ. தேசிகன்	1	0
ஹேமாங்கினி	...	சரத் சந்திரர்	0	12
அநுராதா	...	சரத் சந்திரர்	0	8
ஞானதா	...	சரத் சந்திரர்	1	8

ஜோதி நிலையம்.
திருவல்லிக்கேணி — சென்னை

Koviloor Acadamy

